Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி–29 | 14–09–2005 | புதன் கிழமை | ஓசை–209


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல: 123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222264
இல: 194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12760)





உயர்தரப்பரீட்சையில் சிறப்பிடம் பெற்று தேசியத் தலைவரின் பரிசில்களைப் பெற்ற மாணவர்கள்.

## உ/த பரீட்சையில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு தேசியத் தலைவரின் பரிசில் வழங்கி சிறப்பிப்பு!

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சிறப்பிடம் பெற்ற தமிழ் மாணவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற நிகழ்வில் இந்தப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ தேசியத் தலைவரின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இப்பரிசில்களை வழங்கினார். அகில இலங்கை ரீதியில் முதல் 100 இடங்களைப பெற்ற மாணவர்களில் 20 வீதமானோர் (12ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

### முல்லை. மக்கள் இன்று பேரெழுச்சிக்குத் தயார்

(புதுக்குடியிருப்பு)

வவுனியா தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் முல்லை புதுக்குடியிருப்பில் இன்று நடைபெறவுள்ள எழுச்சி மாநாட்டிற்கான அனைத்து தயார்ப் படுத்தல்களும் பூர்த்தியாகியுள்ளன. அத்தோடு, முல்லை. மாவட்ட மக்கள் அனைவரும் இன்றைய பேரெழுச்சிக்குத் தயாராகிவிட்டனர்.

இன்று பிற்பகல் 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகும். முல்லை. மாவட்டத்தின் (12ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்த-ஹெலஉறுமயவிடையேயான ஒப்பந்தம்

# கண்டி தலதா மாளிகையில் பரிமாற்றம்!

## சனாதிபதியின் எதிர்ப்பிற்கிடையே நடந்தேறியது

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுடன் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட ஒப்பந்தம் நேற்று பரிமாறிக் கொள்ளப்பட்டது. கண்டி தலதா மாளிகையில் மத வழிபாடுகளுடன் இந்த ஒப்பந்தம் பரிமாறிக்கொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தத்தை ஆட்சேபித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.**

மகிந்தராஜபக்ஷவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரரும் ஒப்பந்தத்தைப் பரிமாறிக்கொண்டனர்.

கடந்த ஆறாம் திகதி இந்த ஒப்பந்தம் மகிந்த ராஜபக்ஷ இல்லத்தில் கைச்சாத்தானது.

இந் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி.சில்வா, மங்கள சமரவீர,சுசில் பிரேமஜயந்த ஆகியோர் பங்கேற்றனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் அமெரிக்கப் பயணம் அரசியல் நெருக்கடிகளால் காலதாமதம்!

### –நேற்றுஅதிகாலையிலேயே பயணத்தை ஆரம்பித்தார்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது ஐக்கிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் நேற்று முன்தினம் ஓய்வின்றி பல உயர் மட்டச் சந்திப்புகளை நடத்தியதாக சனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தகவல் வெளிவந்துள்ளது.

சனாதிபதி நியூயோர்க் பயணம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெறவிருந்த போதிலும், பல வேறு முக்கிய பணிகள் காரணமாக பயணம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வரையில் பிற்போடப்பட்டிருந்தது நேற்று அதிகாலை ஒரு மணிக்கு அவர் நியூயோர்க் புறப்பட்டதாக சனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வார காலங்களாக ஏற்பட்டிருக்கும் உட்கட்சி முரண்பாடுகள் காரணமாக அமைச்சர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள், கட்சி முக்கியஸ்தர்களுடன் சனாதிபதி நாள்தோறும் ஆலோசனைகளை நடத்தி வந்தார். இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் ஜே.வி.பியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டமை குறித்து அவரிடம் (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

இருவேறான சம்பவங்களில் போராளிகள் இருவர் சாவடைந்தனர்.

22-02-2003 அன்று முல்லை மாவட்டம் முத்துஐயன்கட்டுப் பகுதியில் நீரில் மூழ்கி போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ வீரவேங்கை முத்துமாறன் (பாக்கியநாதன் றெஜினோல்ட், வசாவிளான், பலாலி யாழ்ப்பாணம், (12ஆம் பக்கம் பார்க்க)

### தியாகி திலீபன் வண்ணப்படம் இணைப்பு

தியாகி லெப். கேணல் திலீபனின் வண்ணப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### புலிகளின் குரல் நேர நீடிப்பு

புலிகளின் குரல் நேயர்கள் அனைவரினதும் வேண்டுகோளுக்கிணங்க 15-09-2005 தொடக்கம் புலிகளின் குரல் ஒலிபரப்பு காலை 9.00 மணிவரையும், தமிழீழ வானொலி எழுமையான ஒலிபரப்போடு காலை 9.00 மணியிலிருந்து பகல் 1.00 மணி வரையும், சிங்கள (12ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பினர் இன்று சந்திப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

சனாதிபதி தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவே இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது. கிளிநொச்சியிலுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

### அவசர காலச்சட்டம் நீடிப்பு; தகவல் எதுவுமில்லை!

சிறிலங்காவில் அமுலிலிருந்த அவசரகாலச்சட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அதன் நீடிப்புக் குறித்து நேற்று நள்ளிரவு வரை எதுவித அறிவிப்புக்களும் வெளிவரவில்லை.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதாயின் நேற்றுப் பாராளுமன்றம் கூடி இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். அல்லது சனாதிபதி தனக்குள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

கிளி/155 ஆம் கட்டை A9 பாதைக்கு (வைலசிற்கு அருகில்) சமீபமாக 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு தொடர்புக்கு A.S ஜெயந்தன், இல.77 விவேகானந்த நகர், கிளிநொச்சி.T.P 077-6424349 (6698)

### தவறவிடப்பட்டுள்ளது

பொருள்:- உடுப்பு வாய்க் கிளிநொச்சிக்கும் வட்டக்கச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்க வேண்டிய முகவரி கட்சன் வீதி இல 96 எனும் வீட்டில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். அல்லது தேவிபுரச்சந்தியில் கோடிஸ் கடையில் ஒப்படைக்கவும். (6611)


## உடையார்கட்டு பிரதேசத்தில் எழுச்சி நாள் ஏற்பாடுகள்

(உடையார்கட்டு)

இன்று நடைபெறவுள்ள வவுனியா பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் மாபெரும் எழுச்சி நாள் நிகழ்விற்கான தயார்படுத்தல்கள் உடையார்கட்டுப் பிரதேசத்தில் ஏற்பாட்டுக் குழுவினரால் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது.

எழுச்சி நாள் நிகழ்விற்காக உடையார்கட்டுப் பகுதியில், புதுக் குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா தலைமையில் ஒன்று கூடல் இடம் பெற்றுள்ளது.

நூற்றுக்கணக்கான மக்கள் இந்த ஒன்று கூடலில் கலந்து கொண்டனர்.

இன்று புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள எழுச்சி நாள் நிகழ்வில் மக்கள் கலந்து அந்த நிகழ்வின் மூலம் சர்வதேசத்திற்கும், சிறிலங்கா அரசுக்கும் ஒரு மித்த குரலில் தமிழரது செய்தியை வெளிப் படுத்த வேண்டிய அவசியத்தினை முல்லை. மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடர், முல்லை. மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப் பாளர் செல்வம் ஆகியோர் எடுத்துக்கூறி கருத்துரைகளை வழங்கினர்.

## உடையார்கட்டு எழுச்சிக் கலைஞர்களின் 14–9 தெருவெளி அரங்கு நிகழ்வு

உடையார்கட்டு எழுச்சி கலைஞர்கள் உடையார்கட்டு பிரதேசத்தில் "14 - 9" என்ற தெருவெளி அரங்கு உடையார்கட்டுப் பிரதேசத்தில் நிகழ்த்தினர்.

உடையார்கட்டுப் பிரதேசத்தின் உடையார்கட்டுச் சந்தைப் பகுதி, சுதந்திரபுரம் சந்தி, பொது மைதானப் பகுதி, மூங்கிலாறு திலீபன் வீதி ஆகிய இடங்களில் இடம் பெற்றது.

இதில் "14-9" எழுச்சி நாளின் அவசியத்தையும் விழிப்பாக இருக்க தவறின் எதிர் காலத்தில்தோன்றும் இடர்களைப் பற்றியும் சித்திரிக்கப்பட்டது.இத் தெருவெளி அரங்கு ஆசிரியர் றோமியலால் உருவாக்கப் பெற்றது. (19)




## ஓவியப் போட்டி



தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, மல்லாவி நுண்கலைக் கல்லூரியினால் நடாத்தப்படும் துணுக்காய் வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஓவியப் போட்டி.

தலைப்பு:- "தியாக தீபம் திலீபன்"
( விடுதலைப் போராட்டப் பாதையில் தியாகி திலீபன் அவர்களின் " அகிம்ஷைப் போராட்டமும் மக்கள் எழுச்சியும்" தொடர்பானதாக இருத்தல் வேண்டும்

அளவு:- 20"x 24" (பிறிசில் போர்ட் அளவு)

பிரிவுகள்:- தரம் - 06 தரம்- 10- பிரிவு I
தரம்- 11 தரம்- 12,13- பிரிவு II

ஆக்கங்களை அனுப்பவேண்டிய இறுதித்திகதி:- 25.09.2005
வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டி அனுசரணை,
வேழவேந்தன் பல்பொருள் வாணிபம் (கமல்),
மல்லாவிநகர். (சி.12818)

அதிபர்,
மல்லாவி நுண்கலைக் கல்லூரி.


## 1500 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அங்கீகாரம் வழங்குமாறு கோரிக்கை

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மேலும் 1500 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்குமாறு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளார்.


தற்போது வழங்கப்பட்டுள்ள 2400 வரையான பட்டதாரி ஆசிரிய நியமனங்களுக்கு மேலதிகமாகவே 1500 பட்டதாரி ஆசிரிய நியமனங் களை வழங்குவதற்கு மத்திய கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை விளம்பரங்கள் வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பரீட்சைத்திணைகளத்தினால் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில்தான் தற்போது பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 4500 பட்டதாரிகளில் சுமார் 2400 பேரே பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்றுள்ளனர். மேலும் 652 பேர் திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பட்டதாரி ஆசிரிய நியமனம் கிடைக்காத பட்டதாரி பயிலுநர்கள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் தங்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில் மேலும் 1500 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க அங்கீகாரமளிக்கும் கோரிக்கை மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் மத்திய கல்வி அமைச்சுக்கு நேற்று செவ்வாய் விடுத்துள்ளார். (25)




# துயரங்களையும், விரக்தியையும் அமெரிக்கர்கள் வெற்றி கொள்ள வேண்டும் -தலாய்லாமா



லொஸ்ஏஞ்சல்சில் வீதிச்சமிக்ஞை பணி நிறுத்தம் காரணமாக அந்நகர் வீதி யொன்றில் வாகனங்கள் திருப்பிவிடப் பட்டுள்ள காட்சி.

(வோஷிங்டன்)


**மூன்று ஆண்டுகளுக்கு முன் செப்ரெம்பர்11 ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல், தற்போது தாக்கிய சூறாவளி ஆகிய பாதிப்புக்களால் ஏற்பட்டுள்ள துயரங்களையும் விரக்தியையும் அமெரிக்கர்கள் வெல்ல வேண்டும் என்று திபெக் ஆன்மீகத்தலைவர் தலாய்லாமா கேட்டுக்கொண்டுள்ளார்.**

உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நினைவு தினம் கடந்தஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதை யொட்டி சி.என்.என் தொலைக்காட்சியில் அவர் உரையாற்றினார். தலாய்லாமா தற்போது அமெரிக்காவில் 20 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். தொலைக்காட்சியல் அவர் ஆற்றிய உரையில்;

'நமக்கு ஏற்படும் துயரத்தை மன வலிமைக்கு ஆதாரமாகக் கருத வேண்டும் என்று திபெத்தில் ஒரு பழமொழி உள்ளது. சவால் ஏற்படும் போது அதை எதிர்கொண்டு வெல்வதற்கான திறமை நமக்குள் இருக்கும் என்றே நான் கருதுகின்றேன். எனவே ஒரு தீர்வை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அதை எதிர் கொண்டு வெற்றி பெறவேண்டும் ஆன்மா மீது நம்பிக்கை உள்ளவன் என்றமுறையில் கூறுகிறேன் மனிதர்களுக்கு ஆன்மா இருக்கிறது என்று நம்புகிறேன்.

விரக்தி அடைந்தால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க இயலாது. அதிகமாகக் கோபமோ துயரமோ விரக்தியோ அடைந்தால் நிம்மதி வராது மேலும் மேலும் துயரமே அதிகரிக்கும்.

தன்னம்பிக்கையால் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புங்கள் என்றார்.அமெரிக்காவில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரணத்துக்காக ரூ.45,00,000 வழங்க உறுதியளித்தார் தலாய்லாமா.



செப்ரெம்பர் 11 நினைவு தினத்தையொட்டி நியூ யோர்க்கில் இரட்டைக்கோபுரங்கள் இருந்த இடம்லேசர் ஒளியால் மின்னுகிறது.

# பெருநாட்டு விமான விபத்தில் உயிர் தப்பியோர் போயிங் விமான நிறுவனம் மீது வழக்கு

(லிமா)

பெரு நாட்டில் கடந்த மாதம் நடந்த விமான விபத்தில் 40 பேர் பலியாகினர். இந்த விபத்தில் உயிர் பிழைத்த ஒரு குடும்பம் விமானத்தை தயாரித்த போயிங் விமான நிறுவனம் மீது வழக்குத் தொடுக்க முடிவு செய்துள்ளது.

கடந்தமாதம்23ஆம் திகதி பெரு நாட்டின் விமான நிலையத்தில் தரையிறங்க தான்ஸ் என்ற விமான நிறுவனத்தின் விமானம் முயற்சி செய்தது. இந்த விமானத்தின் ஊழியர்கள் உட்பட 98 பேர் பயணம் செய்தனர்.

விமானத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக அருகில் இருந்த காட்டுப் பகுதியில் விமானம் விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர். நியூயோர்க்கை சேர்ந்த விவாஸ் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் இந்த விமானத்தில் பயணம் செய்து உயிர் பிழைத்தனர். விபத்து ஏற்பட்ட போது அவர்கள் விமானத்தின் பின் பகுதியில் அமர்ந்திருந்தனர். விபத்தில் சிக்கிய விமானம் போயிங் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான 737-200ரக விமானம்

விவாஸ் குடும்பத்தினர் தற்போது போயிங் நிறுவனத்தின் மீதுவழக்கு தொடுக்கவுள்ளனர். இது குறித்து அவர்களின் சட்டத்தரணி மானுவேல் வான் ரிப்பெக் கூறியதாவது;

விபத்தில் சிக்கிய விமானத்தில் பல தயாரிப்பு கோளாறுகள் இருந்தன. விபத்துக்கு இவை காரணமாக அமையவில்லை. என்றாலும் போயிங் நிறுவனத்தின்மீது வழக்கு தொடுக்க உள்ளோம்.சிக்காகோ நகரை போயிங் நிறுவனம் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. எனவே அந்நகர நீதிமன்றில் தான் வழக்குத் தொடுக்கப்படும். விமான ஊழியர்களுக்கு பயிற்சி கொடுத்த யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் மீதும் வழக்கு தொடுக்கப்படும்.

விபத்தில் சிக்கிய விமானத்தின் இருக்கைகள் மிக மோசமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. விபத்து ஏற்பட்ட உடன் பயணிகள் தப்ப முயன்றாலும், இருக்கைகள் அவர்களைத் தப்பிக்கவிடவில்லை. மோசமான இருக்கைகளினால் பலரது கை கால்கள் முறிந்தன. மேலும் விமானத்தில் அவசர காலத்தில் செயற்பட வேண்டிய விளக்குகள் எரியவில்லை. அவசர காலத்தில் திறக்க வேண்டிய கதவுகள் திறக்கவில்லை, படிக்கட்டுகள் இயங்கவில்லை.

இவ்வாறு மானுவேல் வான் ரிப்பெக் கூறினார்.

இது குறித்து போயிங் நிறுவன செய்தித் தொடர்பாளர் லிஸ்வெர்டியரை கேட்ட போது, வழக்குத் தொடுக்கப்பட்ட பின் அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் பதில் சொல்வோம் என்றார்.



காஷாப்பகுதியில் இஸ்ரேலியர்கள் முற்றாக வெளியேறியதைத் தொடர்ந்து மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ள பலஸ்தீனியர்கள்.

# நோர்வே பொதுத்தேர்தல் வொண்டோவிக் கட்சி தோல்வி

(ஒஸ்லோ)

நடந்து முடிந்த நோர்வேயின் பொதுத் தேர்தலில் ஆளும்வொண்டோ விக்கின் கட்சி 169 ஆசனங்களில் 81 ஆசனங்களைப் பெற்று தோல்வியடைந்துள்ளது.

அதிகரித்த எண்ணெய் விலை காரணமாக பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டு உலக நாடுகளில் அமைதியுடன் வாழ்வதற்கான திட்டமொன்றை நோர்வே ஐக்கிய நாடுகள், ஸ்தாபனத்தில் மதிப்புரை ஒன்றை தெரிவித்ததை தொடர்ந்து பிரதமர் வொண்டோவிக் ஓரளவு ஆதரவைப் பெற்றிருந்த போதிலும் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

இதேவேளை முன்னாள் பிரதமரின் வலது சாரிகூட்டணி 88ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

தோல்வியடைந்த பிரதமர் வொண்டோவிக் அடுத்தமாதம் நடுப்பகுதி அளவில் புதிய பாராளுமன்றம் ஆரம்பிக்கும்வரை காபந்து அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று பாக்தாத்திலுள்ள உல்லாச விடுதியொன்றுக்கருகில் குண்டு வெடித்த இடம் இச்சம்பவத்தில் இருவர் பலியானதுடன், 17 பேர் காயமடைந்தனர்.

# கற்றினா சூறாவளி பாதிப்பு 22 இலட்சம் செலவில் நாய்கள் மீட்பு

(சான் பிரான்சிஸ்கோ)

அமெரிக்காவில் சூறாவளி தாக்கிய பகுதியில் சிக்கிக் கொண்ட 80 செல்ல நாய்கள் விமானத்தில் மீட்கப்பட்டன.

இந்த மீட்புப் பணியை டெக்சாஸ் நகரத்தைச் சேர்ந்த எண்ணெய் தொழிலதிபர் பூன் பெக்கின்ஸ், அவரது மனைவி மதலீன் ஆகியோர் மேற் கொண்டுள்ளனர். சத்திரசிகிச்சை என அழைக்கப்படும் இந்தப் பணிக்காக ரூபா 22 இலட்சத்து 50ஆயிரம் செலவில் விமானத்தை வாடகைக்கு எடுத்துள்ளனர்.

இந்த நாய்கள் முதலில் சான்டியாகோ நகருக்கும் பிறகு அங்கிருந்து சான் பிரான்சிஸ்கோ நகருக்கும் எடுத்துச்செல்லப்படும்.

"எங்களது சேவைத் திட்டத்தின்படி 200 செல்ல நாய்களையாவது காப்பாற்ற வேண்டும் என்பதே குறிக்கோள் என்று பெக்கின்ஸின் செய்தித் தொடர்பாளர் ஜே ரோஸெர் தெரிவித்தார்.

இதனிடையில் நாய்களை எடுத்துச் செல்ல சில கட்டுப்பாடுகளை அதிகாரிகள் விதித்துள்ளனர். மீட்கப்படும் நாய், பூனைகளை 30 நாள் தனிமையாக வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்காக லூஸியானா நகரில் ஆயிரக்கணக்கில் தற்காலிக தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று இயற்கைச் சீற்ற நிவாரண சேவைகள் அமைப்பின் இயக்குநர் கெல்லி ஹாரிங்டன் தெரிவித்தார்.

# கொலம்பிய விமானக் கடத்தல் நாடகம் முடிவுக்கு வந்தது

கொலம்பியாவில் இடம்பெற்ற விமானக்கடத்தல் சம்பவம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. விமானத்திலிருந்த பயணிகளும் விமானிகளும், பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த விமானம் கடத்தப்பட்டபோது அதில் 25 பயணிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. விமானத்தில் பயணம் செய்த ஆயுதம் தரித்த இரண்டு பேரே இந்த விமானத்தைக் கடத்தியுள்ளனர். அவர்களில் ஒருவர் சக்கர நாற்காலியில் சென்றவர் எனவும், நாற்காலிக்கு அடியில் குண்டொன்று பொருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

யோறன்சியாவிலிருந்து பொகாட்டா நோக்கி புறப்பட்ட விமானத்தை கடத்தல்காரர்கள் இராணுவ விமான நிலையத்தில் தரையிறக்குமாறு விமானிக்கு உத்தரவிட்டுள்ளனர். கொலம்பிய பொலிசாரின் முயற்சியினால் கடத்தல் முயற்சி தோல்வியடையச் செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவரையும் பொலிசார் கைதுசெய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# சீனா சாதனை

சீன விவசாயிகள் ஹேக்டர் ஒன்றில் 18 ஆயிரத்து 449 கிலோ அரிசி உற்பத்தி செய்து உலக சாதனை படைத்துள்ளனர்.இதற்கு முன் 2004 இல் உற்பத்தி செய்த 18ஆயிரத்து 298 கிலோ தான் அதிக பட்சமாக இருந்தது.சீனா அரிசி ஆய்வு நிறுவனம், யூனான் விவசாயப் பல்கலைக்கழகம், யூனான் மாகாண விவசாய கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளன.புதிய ஹைபிரிட் ரக அரிசி கடந்த மார்ச் மாதத்தில் நாற்று விடப்பட்டது. மே மாதம் நடத்தப்பட்டு செப்ரெம்பர் பத்தில் அறுவடை செய்யப்பட்டது. இதற்கு மொத்தம் 192 நாளா கியது.இந்த அரிசியின் பெயர் சூப்பர் ரைஸ் ஐஐ யூ 28இது நீண்ட கதிர்களையும் பெரிய. இலைகளையும் கொண்டு வளரும்.

# தோல் பொருள் உற்பத்தி நிலைய பயிற்சி நிறைவும், சான்றிதழ் வழங்கலும்

**தோல் பொருள் உற்பத்தி நிலையத்தின் பயிற்சி நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் விற்பனைக் கண்காட்சியும் மல்லாவியில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.**



படம்:-சசி

தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் ஐ.ஒ.எம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் உருவாக்கப் பெற்று பயிற்சியளிக்கப்பட்டு வந்த தோல் பொருள் உற்பத்தியின் பயிற்சி நிறைவு விழாவும் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், விற்பனைக்கண்காட்சியும் மல்லாவியில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு நடை பெற்றது.

அங்கு பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களால் உருவாக்கப் பெற்ற பாதணிகள், தோள் பைகள் போன்ற பல உற்பத்திப் பொருட்கள் விற்பனைக் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து விற்பனை நோக்கில் இந்நிலையம் உற்பத்திகளை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.இந் நிகழ்வில் பொதுச் சுடரேற்றலைத் தொடர்ந்து மல்லாவி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றலையடுத்து. கண்காட்சி மண்டபத்தினை தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்ப நலன்காப்பக பொறுப்பாளர் திருக்குமரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து நடைபெற்ற அரங்க நிகழ்வில் சமுதாய முன்னேற்ற நிலையத்தைச் சேர்ந்த கணேஸ்வரன் உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். தொடர்ந்து சான்றிதழ்களை தமிழினி, திருக்குமரன் மகளிர் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர், ஆகியோர் வழங்கினர்.


இந் நிகழ்வில் போராளிகள், பொறுப்பாளர்கள், பொது மக்கள் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ச,தீ)

# இடைத்தங்கல் முகாமில் வசிப்போருக்கு பால் மா உணவு வழங்கல்

முல்லைத்தீவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது பாதிப்படைந்து இடைத் தங்கல் முகாமில் வாழும் மக்களுக்கு த.பு.கழக அனுசரணையுடன் சேரன் வாணிபத்தினர் முல்லை மக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஒழுங்கு படுத்தலில் பால்மா உணவினை வழங்கி வருகின்றனர்.

நியூசிலாந்து பால் உணவு உற்பத்தி ஆலையின் அனுசரணையுடன் சேரன் வாணிபத்தால் வழங்கப்படும் இந்தப் பால்மா உணவு வழங்கல் முதற்கட்டமாக கள்ளப்பாடு இடைத் தங்கல் முகாமில் பி.ப 3.30 மணிக்கு சேரன் வாணிபத்தின் பொது முகாமையாளர் இ. புவியழகன் தலைமையில் ஆரம்பமானது. நிகழ்வில் கருத்துரையினை வன்னி வேளாண் தொழில்நுட்பநிறுவனபொது முகாமையாளர் செ.புவனேஸ்வரன் வழங்கினார்.

முதல் பால்மா பொதியை சேரன் வாணிபத்தைச் சேர்ந்த பிரதேச மேலாளர் உ. உமாசங்கர், முல்லை மக்கள் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக அலுவலர் உஷா ஆகியோர் வழங்கினர்.தொடர்ச்சியாக ஐந்து மாதங்களிற்கு ஒருகுடும்பத்திற்குதலா இரண்டு பால்மா பக்கற்றுக்கள் வழங்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் வீதி அருகாமையிலும் மற்றும் ஏ-9 பிரதான வீதியோரங்களிலும் உரப்பைகளில் போடப்பட்டு வைக்கப்பட்டுள்ள குப்பை, கழிவுப்பொருட்கள் கடந்த சில தினங்களாக அகற்றப்படாது அதே இடத்திலேயே இருப்பதனைப் படத்தில் காணலாம். [படம் சோதி]

# வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகம் புளியங்குளத்தில் அமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

புளியங்குளத்தில் பத்து மில்லியன் ரூபா செலவில் வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகம் கட்டப்பட்டு வருவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வி நிர்வாகமுறை, வலயக்கல்வி அலுவலக நடைமுறை வந்து பலவருடங்களாகியும் இதுவரை வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு நிலையான ஒரு கட்டடம் இருக்கவில்லை. இதுவரை வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட காமினி மகாவித்தியாலயத்தில் இயங்கி வரும் இவ் அலுவலகம் எதிர்வரும் சனவரி மாதம் முதல் புளியங்குளத்தில் புதிதாக கட்டப்பட்ட அலுவலகத்தில் இயங்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சுதேச வைத்திய மேம்பாட்டு ஆய்வுப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சுதேச மருத்துவ சேவைகள் இணையத்தின் ஏற்பாட்டில் "சுதேச வைத்திய மேம்பாட்டு" ஆய்வுப் பட்டறை நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.





படம்:-சோதி

கிளி. மாவட்ட சுதேச வைத்திய சேவைகள் இணையத் தலைவர் வைத்தியர் எஸ். கணேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து சுதேச வைத்திய அபிவிருத்தி தொடர்பான கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை பேராசிரியர் சு.பவானி, விக்ரமன், தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர், கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் ஆகியோர் வழங்கினர்.

மேற்படி ஆய்வுப் பட்டறையில் சகல பிரதேசங்களிலுமிருந்து சுதேச வைத்தியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கலைமகள் சிறுவர் பூங்காவின் கலைவிழா நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் பின் தங்கிய கிராமமான தேறாங்கண்டல் பகுதியில் அமைந்த கலைமகள் சிறுவர் பூங்காவின் கலை விழா நிகழ்வு கடந்த எட்டாம் திகதி 7.00 மணிக்கு கலைமகள் பூங்கா விளையாட்டு மைதானத்தில் பூங்கா நிர்வாகி ச.தேவமலர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழஅரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து, அரங்க நிகழ்வுகளும் இடம் பெற்றன. வரவேற்பு நடனத்தை மணிவண்ணன் துளசிகா நிகழ்த்தினார்.

தொடர்ந்து கருத்துரையை தங்கன் ஆற்றினார் அதனைத் தொடர்ந்து கலைமகள் சிறுவர் பூங்காவில் சிறுவர்களின் காவடி நடனம், குழு நடனம், தனி நடனம், கும்மியாட்டம் ஆசிரியர்களின் அபிநய நடனம் ஆகியவை இடம்பெற்றன.

நன்றியுரையினை ஆசிரியர் ஜெயலட்சுமி ஆற்றினார் இந் நிகழ்வானது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியின் நிர்வாகிப்பில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் பொ.கந்தன், போராளி, மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், பொது மக்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# அடிக்கல் நாட்டு விழா

(மன்னார்)

மன்னார் எழுத்தூர் தலைவன் கோட்டையில் ஒ.என்.டி.ப்ரி நிறுவனத்தினரால் கடந்த 7 ஆம் திகதி 10.00 மணிக்கு ஆடை வெண்மையாக்கல் வளாகத்தில் வெள்ளையாக்கல் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந் நிகழ்வில் மன்னார் அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (18)

# பணம் கண்டெடுப்பு

முகமாலை நுழைவாயிலில் அமைக்கப்பெற்றுள்ள தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு மண்டபத்தின் முன் பக்கத்தில் நேற்று முன்தினம்ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப் பணத்திற்குரித்துடையோர் சான்று காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் இதனை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முகமாலையில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேறாங்கண்டல் கிராமத்தில்குடிநீர்க் கிணறுகள் பாவனைக்கு உதவாத நிலையில்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் உள்ள குடிநீர் கிணறுகளுக்கு குளோரின் இடப்படாமையால் தண்ணீர் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது.

மேற்படி கிராமத்தில் 250 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன மிகவும் பின் தங்கிய கிராமத்தில் சொற்பமான குடிநீர் கிணறுகளே உள்ளன. இக் கிணறுகள் பல வருட காலமாக இறைக்கப்படாமல் இருந்து வருவதால் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இக் கிராமத்தின் கிணறுகளை கவனத்தில் எடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகின்றனர். (24)

# சர்வதேச செஞ்சிலுவைச்சங்க நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கரம்பைக்குளத்தின் புனரமைப்பு பணிகள் பூர்த்தியடையும் நிலையில்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியில் அமைந்த கரம்பைக்குளம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் நிதியுதவியுடன் பதினாறு இலட்சத்து எண்பத்தி மூவாயிரம் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகள்மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவடையும் நிலையில் இருந்து வருகின்றது. அத்துடன் இக் கரம்பை குளத்தை புனரமைத்த சிறந்த பயனாளிகளுக்கு உப உணவுப் பொருட்கள் என்பவையோடு விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இக் குளத்தின் மூலம் விவசாயிகள் சிறந்த பயனை அடையவுள்ளனர். (24)

# முல்லையில் இன்று மக்கள் அணிதிரண்டு தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடனம்

(அலுவலக செய்தியாளர்)

**வவுனியா தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இன்று முல்லை மாவட்டத்தில் தமிழ்தேசிய எழுச்சி நாள் நிகழ்வு இடம்பெறவுள்ளது. மாலதி விளையாட்டு மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு தமது எழுச்சிப் பிரகடனத்தை வெளியிடவுள்ளனர்.**

**எமது மண், எமது நாடு எமக்கு வேண்டும். எமது விடுதலையை சுய நிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும் என்று கோரி தமது எழுச்சிப் பிரகடனத்தை வெளியிடவுள்ளனர். இவ் எழுச்சி நாள் குறித்து பொது அமைப்புக்கள் விடுத்த அறை கூவல்கள் வருமாறு;**

## சர்வதேசத்தின் தார்மீக ஆதரவைக் கோருகிறோம்

——— முல்லை.தமிழ் தேசிய எழுச்சிச்செயலணி

இலங்கைத் தீவிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அமைதிவழியில் சமாதான முறையில்-பேச்சுமூலம் இணக்கத்தீர்வு காணப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களது இன்றைய விருப்பமாகும். இதன் அடிப்படையிலேயே கடந்த யூலை மாதம் 27ஆம் நாள் வவுனியாவிலே கூடிய பேராளர்கள் மரபுவழித்தாயகம் தேசிய இனம் தன்னாட்சி என்பவற்றை உள்ளடக்கிய பிரகடனத்தை இயற்றி வெளியிட்டனர். எமது மக்களின் உள்ளக் குமுறல்களை வெளிக்காட்டும் வகையிலே அந்த நிகழ்வு இடம்பெற்றது.

இன்றைய தமிழ்தேசிய எழுச்சிநாள் நிகழ்வில் இதன் மூலம் சர்வதேசத்தினது தார்மீக ஆதரவை எமது மக்கள் கோரவிருக்கின்றார்கள். இந்த நிகழ்வின் மூலம் சர்வதேச சமூகத்திற்கு ஒரு முக்கிய செய்தியை எமது மக்கள் சொல்லவிருக்கிறார்கள்.

சமாதானம், சமூகநேயம், சகவாழ்வு என்பவற்றைப் போதிக்க முனையும் சர்வதேசம் எமது மக்கள் சமாதான, சமூகநேய, சகவாழ்வையே கோரி நிற்கிறார்கள். அதற்கான தார்மீக ஆதரவைத் தந்து உதவுங்கள்.

தமிழ்மக்கள் விரும்புகின்ற அமைதியான நிம்மதியான தமது மண்ணில் தம்மைத் தாமே ஆளுகின்ற நிலையை யுத்தமின்றி இரத்தமின்றி பெற்றுக்கொள்ள தங்களது செல்வாக்கைப் பிரயோகியுங்கள்.

இதைத் தங்களால் செய்ய முடியாதுவிடின் தமிழ்மக்கள் தம் தலைவிதியைத் தாமே தீர் மானித்துக்கொள்ள தமது வழியை-மாற்று வழியைத் தேடிக்கொள்ள தங்கள் ஆதரவை வழங்குங்கள். இந்த சந்தர்ப்பத்தைச் சிறிலங்கா அரசும் சர்வதேசமும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் எமது மக்களின் கொதிநிலையிலுள்ள உள்ளக்குமுறல் வெடித்து பேரழிவு ஏற்படுவது தவிர்க்கமுடியாமல் போய்விடும். நல்லதை நினைப்போம், நல்லதே நடக்கட்டும்.

## வான் வழியாக எங்கள் குரல் ஒலிக்கட்டும்

——— முல்லை.தேசியஎழுச்சிப் பேரவை

சமாதான காலத்திலும் எங்களை அழிப்பதற்கு எதிரியானவன் இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கின்றான். சர்வதேசத்திற்கு முன்னால் ஒரு வார்த்தை, எங்களுக்கு முன்னால் இன்னோர் செயல் என்றவாறு எதிரியின் நடவடிக்கைகள் நகர்ந்து கொண்டு செல்கின்றது.

இந்த வேளையில் எங்களுடைய கூட்டுப் பலத்தை காட்டத் தவறுவோமானால் உலகமும் எதிரியின் வார்த்தைகளை நம்பி விடும். இதனால் எதிரி நகர்த்திக் கொண்டு செல்லும் போருக்கு சர்வதேச உலகமும் ஆதரவை வழங்கக் கூடும். எனவே தான் நாங்கள் எழுச்சி கொள்கிறோம்.

தமிழ் பேசும் மக்களின் நீதியான உணர்வுகளையும்,பலத்தையும் எதிரிக்கு காட்டவேண்டும். இன்றேல் நாம் வீழ்ச்சி அடைவோம்.

காலங்காலமாக பல மாவீரர்களை இழந்து பல தியாகங்களைப் புரிந்து உலக அரங்கிலே நீதியான இனம் என்ற இடத்தைப் பிடித்துக் கொண்ட நாங்கள் இன்று பலம் அடையாது விட்டோமானால் சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆசைகள் யாவும் மேடைஏறிவிடும். அது தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சாபக்கேடாகவும் இருக்கலாம்.

இத்தனைக்கும் முடிவெடுக்க வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் எழுச்சி நாள் முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.மாவட்ட மக்கள்அனைவரும் ஒன்று கூடி வான் வழியாக எங்கள் குரல் உலகம் அனைத்திற்கும் கேட்கச் செய்ய வேண்டும். இதைக் கண்டு எதிரி அஞ்சவேண்டும். சர்வதேசம் எங்கள் தார்மீ கத்தை உணர வேண்டும்.

## எழுச்சிநாள் நல்ல பதில் சொல்லப் போகின்றது

——— முல்லை.மாவட்ட மாணவர் ஒன்றியம்

இன்று முல்லை மாவட்டத்தில் பேரெழுச்சிகொள்ளும் நாளாகும். சிங்கள அரசினது போர் நடவடிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அமைதிக்குஅநீதி சொல்லும்சிங்களம் நாளுக்கு நாள் விசத்தைக் கக்கிக்கொண்டிருக்கிறது. இந்த வேளையில் வவுனியாவில் பிரகடனம் செய்து சர்வதேச உலகிற்கு எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினோம். இன்று முல்லை மாவட்டத்தில் அதற்கு வலுச்சேர்க்கின்றோம்.

மாணவர் உணர்வு என்பது தூக்கி வீசக்கூடிய உணர்வல்ல என்பதை இலங்கை அரசு இதுவரை உணர்ந்திருக்க வேண்டும். தவறினால் காலந்தான் பதில் சொல்லும். எங்கள் உள் ளங்களில் சிங்கள ஏகாதிபத்தியம் எம் உரிமையை ஏற்றுத்தராது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டோம். எங்கள் உள்ளங்களில் இனி எப்போதும் சிங்கள அரசு நண்பராக இருக்க முடியாது. அவர்கள் எதிரியாகத்தான் இருப்பார்கள். அப்படியானால் அந்த எதிரியை வெல்வதற்கு நாம் ஒன்றுபடுவதை விட வேறு வழியில்லை முல்லை மாவட்ட எழுச்சி சிங்கள அரசுக்கும், சர்வதேச உலகிற்கும் நல்ல பதில் சொல்லப் போகிறது. பல்லாயிரம் குரல்கள் அந்தப் பதிலைச் சொல்லப் போகின்றன. அதன் பின்பும் போரா? சமாதானமா? என்று முடிவெடுக்க வேண்டியவர்கள் சிங்கள அரசும்,சர்வதேசமுமே என்பதை தெளிவாக கூறிவைக்க விரும்புகின்றோம்.

## வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச் சேர்ப்போம்

——— முல்லை.வலயக்கல்விப் பணிப்பாளர்

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் இவ் எழுச்சி நாளில் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து உரைக்கும் குரல் சர்வதேசத்தின் மூடியிருக்கும் கண்களைத் திறக்கச் செய்யும் என நம்புகின்றோம். வாழ்விட உரிமை மறுக்கப்பட்டுள்ளமை, அடிப்படைக் கல்விஉரிமையில் சம நிலை பேணப்படாமை, மாணவர்களை இனம்,மதம் எனப் பாகுபாடு காட்டி வளங்களை சம மாகப் பங்கிடாமை, பாடசாலைகளின் பௌதிக தேவைகளைப் பூர்த்தி செய்யாமை,தேவையான ஆசிரிய வளத்தை தந்துதவாமை, நவீன தகவல் தொழில் நுட்ப சாதனங்களைத் தராமை முத லான கல்வியியல் பாகுபாடுகளை சர்வதேச சமூகம் உணர்ந்து அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென குரல் எழுப்புவோம்.

குண்டுச் சத்தங்கள், விமான அச்சுறுத்தல்கள், செல்வீச்சுக்கள் மத்தியில் எமது மாணவர்கள் மரநிழலில் கல்வி பயிலும் காலத்தையும் இடப் பெயர்வுகளையும் உருவாக்க வேண்டாமென அரசை வற்புறுத்துமாறு உரத்த குரலில் முழங்குவோம்.

தென்னிலங்கைப் பாடசாலைகள் போல் கணனிகளை வழங்கி, ஆய்வு கூடங்களைக் கட்டித் தந்து நவீன உலகை தமிழ்பேசும் மாணவர்கள் பெற்றிட அறிவுரையை அரசுக்கு வழங்க சர்வதேச அறிவியல் உலகமே முன்வாரீர் என உரத்து உரைப்போம். வருட இறுதியில் பிழையான தகவல்கள், எழுத்துகளுடன் பாடப் புத்தகங்களை அனுப்பாதீர் என வற்புறுத்துவோம்.

எமது இனம்,மொழி, பண்பாடுகளை திட்டமிட்டுஅழிக்கும்செயற்பாடுகளை தடுத்து நிறுத்துமாறு சர்வதேசத்தை வற்புறுத்துவோம், ஒட்டுமொத்தத்தில் முல்லை மக்களின் கோரிக்கைகளை செவிமடுத்து எமது இனத்தின் அபிலாசைகளை நிறைவு செய்யுமாறு கல்விச் சமூகமும் ஒன்றுணைந்து குரல் கொடுக்கின்றது.

## முல்லையிலும் பேரெழுச்சி அறை கூவ வாரீர்

——— முல்லை.அன்னையர் முன்னணி

காலம் காலமாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்த தமிழினம் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைக்கு வடிவம் கொடுத்து உயிர் விலை கொடுத்து சொத்திழந்து விடுதலைக்காய் போராடி விடுதலையின் விளிம்பில் நின்ற வேளை சர்வதேச சமூகத்தின் பார்வையின் முன்னும் மூன்றாம் தரப்பின் அனுசரணையுடனும், யுத்த வெறி பிடித்த சிங்கள அரசை சமாதானத்துக்கு அழைத்தோம்.

சிங்கள பேரினவாதம் சமாதான விதிமுறைகளை மீறி சமாதான காலத்திலும் நிராயுத பாணிகளாக நிற்கும் எமது போராளிகளையும், மக்களையும் கொன்றும் கொடுமைப்படுத்தியும், வருகிறது. நாம் சமாதானத்தைக் காப்பதற்காக நிறைந்த உயிர் விலை கொடுத்தும், பொறுமை காத்தும் கொள்வதால் தான் சமாதானம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழ மக்களாகிய நாம் பொறுமையின் எல்லையில் நின்று சர்வதேச சமூகத்திற்கு அறை கூவுகின்றோம். இனியும் சமாதானம் என்ற போர்வையில் நின்று சிங்களத்தின் போலி நாடகம் அரங்கேறுவதை அனுமதிக்க முடியாது. கடந்த கால அரசின் சமாதானப் போக்கு எமக்கென்றொரு தீர்வைத் தரப் போவதில்லை.

தமிழ் மக்களாகிய நாம் அறவே அரசின் மீது நம்பிக்கை இழந்த நிலையில் சர்வதேசத்திடம் உரத்துக் குரல் கொடுக்கின்றோம். எங்கள் சுய நிர்ணய உரிமை எமக்கு வேண்டும் சர்வதேச சமூகம் எமது நியாயப்பாட்டை உணர்ந்து சிங்கள அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழர்களின் தலை விதியும், தமிழர்களின் விடுதலையையும், பெற்றுத் தரும் ஒரே அமைப்பு விடுதலைப்புலிகள் என்பதையும் அதன் தலைவர் மேதகு வே. பிரபாகரன் ஒருவரே என நாம் நம்புகின்றோம்.

எனவே வரலாற்று சிறப்புமிக்க வவுனியா மாநாட்டு பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும், சர்வதேசம் எமது கோரிக்கையை அங்கீகரிக்கக் கோரியும் முல்லையிலும் மாபெரும் எழுச்சி இப் பேரெழுச்சி நிகழ்வில் குரல் கொடுப்போம். அனைவரும் வாரீர்.

## முல்லையில் பிரமாண்டமான எழுச்சிநாள்

முல்லை.தமிழ் தேசிய எழுச்சி செயலணி ,ஊடகத்துறை

முல்லைத்தீவு மாவட்ட தமிழ் பேசும் மக்களால் நடத்தவுள்ள பிரமாண்டமான எழுச்சிநாளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. புதுக்குடியிருப்பு நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. நகரத்திலிருந்து நாலாபக்க வீதிகளும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வீட்டுத்தரிசிப்புக்கள் கிராமம் கிராமமாக நிகழ்ந்த வண்ணமுள்ளன. பாண்டியன்குளம் தொடக்கம் செம்மலை வரையாகவுள்ள மக்களுக்கான போக்குவரவு ஒழுங்குகள் நடந்தவண்ண முள்ளன. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அணிதிரண்டு குரலெழுப்பவுள்ளார்கள்.

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்ப்பதற்காகவும், அனைத்துலக சமூகங்களும் ஒன்று பட்ட மக்களின் வேண்டுகைக்குரலைச் செவிமடுப்பதற்காகவும், மக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறு என்ற நிலையில்லாது தமிழீழத் தேசியத்தலைவரின் தலைமையில் அனைத்து மக்களும் ஒன்றுபட்டுவிட்டார்கள் என்ற செய்தியும் இவ்வெழுச்சி நாளினூடாக வெளிப்படுத்தப்படவுள்ளது.

தமிழர் தம் தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளார்கள். தாயக மண்ணில் இறைமைகொண்ட தன்னாட்சியொன்றை அமைக்கவேண்டுமென்ற அத்தியாவசிய தேவையை உணரத்தலைப்பட்டுள்ளார்கள். காலம் காலமாக தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகளால் ஏமாற்றப்பட்ட தமிழ்மக்கள் எதுவும் கிடைக்குமென்ற நம்பிக்கை யற்றவர்களாகி விட்டார்கள்.

அரசபயங்கரவாதத்தினின்றும், தேசவிரோதிகளிடமிருந்தும் போராளிகளையும், தமிழ்மக்களையும் காக்கவேண்டிய தேவை உணரப்பட்டாயிற்று. (சோ)

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கல்வி மாநாடு

வவுனியா மாவட்டம் வன்னி பெரு நிலப்பரப்பின் இருதய நிலம். இம்மாவட்டம் 1966.9 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டத்தில் இரண்டு கல்வி வலயங்கள் உள்ளன. 1. வவுனியா தெற்கு 2. வவுனியா வடக்கு. வவுனியா வடக்கு கல்விவலயம் 1266.6 ச.கி.மீ பரப்பளவுடையது. இது வவுனியா மாவட்டத்தின் மூன்றில் இரண்டு வீத நிலப்பரப் பாகும். வவுனியா வடக்கு கல்வி வலயம் மூன்று பிரதேச செயலக நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களைக் கொண்டுள்ளது. (வவுனியா, வவுனியா தெற்கு,வவுனியா-வடக்கு)

வவுனியா வடக்கு கல்விவலயம் 100% விவசாய நிலப்பரப்பினைக் கொண்டது. இக்கல்விவலய பிரிவிற்குள் ஏறத்தாழ 37068 பேர் வசிக்கின்றனர். இம்மக்களில் 95% மானோர் விவசாயிகளாகவும், 3% மானோர் விவசாய விளைபொருள் வியாபாரிகளாகவும் 2% மானோர் அரச, அரச சார்பற்ற ஊழியர்களாகவும் காணப்படுகின்றனர்.

வவுனியா வடக்குக் கல்வி வலய நிலப்பரப்பில் சேமமடுக்குளம், கல்மடுக்குளம் ஆகிய இரு பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் காணப்படுகின்றன. மேலும் 140க்கு மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் காணப்படுகின்றன. கனகராயன் ஆறு, பறங்கியாறு என்பன இப்பிரதேசத்தில் உள்ள ஆறுகளாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஆசியாவில் இடம்பெற்ற மிக நீண்ட நாட்கள் நீடித்த இராணுவ நடவடிக்கை 'ஜெயசிக்குறு' ஆகும். இவ் இராணுவ நடவடிக்கையினால் வவுனியா வடக்கு கல்வி வலய பிரதேசத்துக்குட்பட்ட மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்தனர். மாணவர்களின் கல்வி இருப்பு கேள்விக்கிடமானது. இவ்வாறான ஒரு சூழலில் தான் 1998 இல் வவுனியா வடக்குக் கல்வி வலயம் உருவாக்கப்பட்டது. முதலாவது வலயக் கல்விப்பணிப்பாளராக ஆ. பொன்னையா அவர்கள் கடமையேற்றார். அக்காலத்தில் நிழல் தரு மரங்களே பாடசாலைகளாயின. அலுவலகப் பை அதிபரின் காரியாலயமாக இருந்தது.

22.02.2002 ஆம் திகதியன்று ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு 69% மான பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கின.

மீள் குடியேற்றப் பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வி புனரமைப்புப் பணி அவசியமாகவும், அவசரமாகவும் காணப்பட்டது. இதனை நன்கு உணர்ந்த வன்னிக் கல்விக்கழக முன்னைநாள் பொறுப்பாளர் சு. ஞானம் அவர்கள் எமது கல்வி வலயத்தின் கல்விசார் புனரமைப்புப் பணிகளில் கூடிய சிரத்தைக் காட்டினார். ஓலைக் குடில்கள் அமைப்பதில் இருந்து மாடிக் கட்டடங்கள் அமைப்பது வரை அவரது உழைப்பும், அனுசரணையும் கிடைத்தது. அவரின் முயற்சியும் உழைப்பும் இல்லை என்றால் எமது வலயத்தின் கல்விப் புலம் இவ்வளவு விரைவாக முகிழ்ந்திருக்க முடியாது.

மேலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நிகொட், யுனிசெப், போரூட், தியாகி அறக்கொடை நிதியம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வவுனியா வடக்கு கல்விவலயம் நெடுங்கேணிக் கோட்டம், ஓமந்தைக் கோட்டம் என இரு கல்விக் கோட்டப் பிரிவுகளைக் கொண்டது. நெடுங்கேணிக்கோட்டத்தில் 42 பாடசாலைகளும், ஓமந்தைக் கோட்டத்தில் 47 பாடசாலைகளும் அமைந்துள்ளன. மொத்தமாக 89 பாடசாலைகள் உள்ளன. இதில் 62 பாடசாலைகள் சொந்த இடத்திலும் 27 பாடசாலைகள் இணைக்கப்பட்ட பாடசாலைகளாகவும் இயங்குகின்றன. வவுனியா வடக்குக் கல்வி வலயத்தில் மூன்று 1 ஏபி பாடசாகைளும் ஏழு 1 சி பாடசாலைகளும் பத்து தரம் II பாடசாலைகளும் அறுபத்தொன்பது தரம் III பாடசாலைகளும் உள்ளன.

இக்கல்விவலயத்தில் தற்போது 324 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இன்னும் 316 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். பாடரீதியாகக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியப் பற்றாக்குறை அதிகமாயுள்ளது. தேசிய ரீதியாக 22 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற நிலை காணப்படுகின்றது. எமது வலயத்தில் 29 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற நிலையே காணப்படுகின்றது. வவுனியா வடக்கு கல்விவலயப் பாடசாலைகளில் தற்போது 9,297 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இக் கல்வி வலயத்தில் மூன்று 1 ஏபி பாடசாலைகள் உள்ள போதிலும் க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான வகுப்புக்களை ஆரம்பிக்க " சீனப் பெருஞ்சுவர்" போல் ஆசிரிய வளப்பற்றாக்குறை தடையாக உள்ளது.

வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளில் 89 அதிபர்கள் உள்ளனர். இவர்களில் 39 தரம் பெற்ற அதிபர்களும் 50 கடமைநிறைவேற்று அதிபர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வலயப் பாடசாலை மாணவர்கள் ஏதாவது ஒரு கலை நிகழ்வுகளை நடாத்த வசதிகளுடன் கூடிய பொது கலையரங்கு எதுவுமில்லை.

**திரு. செ. ஜேசுநேசன்**
**(ஆசிரிய ஆலோசகர்)**

பாடசாலைகளில் கூட கலை நிகழ்வு நடத்தக்கூடிய மண்டப வசதிகள் இல்லை. எனினும் ஒவ்வொரு வருடமும் எமது வலயப் பாடசாலை மாணவர்கள் தேசிய மட்ட தமிழ்மொழித்திறன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டுவது பெருமைக்குரியதாகும்.

இவ்வலயப் பாடசாலைகளில் பௌதிக வளப்பற்றாக்குறையும், ஆசிரியவளப்பற்றாக்குறையும் உள்ள போதிலும் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றமையை அட்டவணை காட்டுகின்றது. இந்நிலைமையில் இவ் வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

| ஆண்டு | க.பொ.த.சா.தரம் | | க.பொ.த.உ.தரம் | |
|---|---|---|---|---|
| | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் | பரீட்சைக்குத் தோற்றியோர் | பல்கலைக்கழக தகுதிபெற்றோர் |
| 2000 | 295 | 64 | 77 | 37 |
| 2001 | 357 | 60 | 68 | 19 |
| 2002 | 291 | 68 | 62 | 07 |
| 2003 | 377 | 103 | 105 | 58 |
| 2004 | 352 | 94 | 134 | 73 |

எமது கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி வளர்ச்சியில் மாணவர்கள் பக்கத்தில் இருந்தும் சில சவால்கள் வந்து தலைநீட்டுகின்றன. குறிப்பாக மாணவர் இடைவிலகல் ஒரு பிரச்சிரனையாகும். 2004 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இடைவிலகியோர்.0.33% ஆகும்.இதே ஆண்டு வவுனியா வடக்குக் கல்வி வலயத்தில் 3.74% மான மாணவர்கள் இடைவிலகினர். இதற்கு குடும்ப வறுமையும் ஒரு காரணமாகும். அடுத்தது மாணவர் வரவின்மையாகும். விதைப்புக்காலம், அறுவடைக்காலம், ஆலய திருவிழாக்காலம் தொடங்கி விட்டால் மாணவர் வரவு கணிசமானளவு வீழ்ச்சியடைகின்றது. இவ்வாறான பருவகால வரவின்மைப் பிரச்சினை கல்வி அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் தொடர்கதையாக உள்ளது.

தற்போது வவுனியா வடக்குக்குக் கல்வி வலயத்தின் வலய கல்விப்பணிப்பாளராக திரு சி. தண்டாயுதபாணி அவர்கள் கடமையாற்றுகின்றார். இவர் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் தலைவராக இருந்தவர். கல்வி வலயத்தில் பணியாற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்களை மனித நேயத்துடன் வழிநடத்துபவர். இக்கல்வி வலயத்தின் கல்வித்தளத்தில் முக்கியமான பல விடயங்களைச் செயலுருப்படுத்தி வருகின்றார்.

இவரின் கடும் முயற்சியின் பயனாக 10 மில்லியன் ரூபா செலவில் வலயக் கல்விப் பணிமனைக் கட்டடம் புளியங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு முன். மு/சிவபுரம் அ.த.க. பாடசாலையிலும் பின்னர் வ.புதுக்குளம் ம.வியிலும் இயங்கிவந்த வலயக்கல்விப்பணிமனை தற்போது வ/காமினி மகாவித்தியாலய பாடசாலைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. தமிழ்மொழி தினத்தை விழாவாகக்கொண்டாடும் மரபு தொடங்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு வலய பாடசாலைகளுக்கிடையே இரண்டு மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி தொடங்கப்பட்டுள்ளது. (வ.நெடுங்கேணி ம.வி. எதிர் வ/புதுக்குளம் ம/வி போட்டி முடிவடைந்துள்ளது) பாடசாலைகளில் பரிசளிப்பு விழா நடத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் சஞ்சிகை வெளியிடும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.வாராந்த கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் கல்விச் சிந்தனை வாசிக்கும் மரபு தொடங்கப்பட்டுள்ளது.

இச்செயற்பாடுகளின் நீட்சியாக " இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும் கல்வி விருத்திக்கான மூலோபாயங்களைத் தேடலும்" என்ற தலைப்பில் கல்விமாநாடு ஒன்று எதிர்வரும் 16.17.09.2005 ஆம் திகதிகளில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்துவதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளை வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்.

இம்மாநாட்டின் நோக்கம் " சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கியிருக்கும் வவுனியா வடக்குப் பிரதேசத்தின் கல்விப்பிரச்சினைகள் மீது சமூகத்தின் கவனத்தை குவிமையப்படுத்துவதும் அப்பிரச்சினைகளிலிருந்து தீர்வு பெறுவதற்கான வழிவகைகளைக் காணுவதுமாகும்"

இக்கல்வி மாநாட்டில் கல்விசார் பிரச்சினைகள் 10 தலைப்புக்களில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவ்வாய்வறிக்கையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்விப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகளும் முன்வைக்கப்படவுள்ளன. இக்கல்வி மாநாட்டில் தமிழீழ கல்விக்கழகத்தினர், வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், கல்வியியலாளர்கள் , பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக ஏறக்குறைய 250 பேர் கலந்துகொள்வர்.

கல்வி மாநாட்டுத் தீர்மானங்கள் செயலுருப் பெறத்தொடங்கியதும் கல்வி அபிவிருத்திப் பணி மேலும் செப்பனிடப்படும். 1945 ஆம் ஆண்டு அணுகுண்டு வீசப்பட்ட ஹிரோசிமா, நாகசாஹி நகரங்கள் இன்று உலகின் கவனத்தை ஈர்க்கும் தொழில் நுட்ப நகரங்களாக மாறியுள்ளன. அதேபோல் " ஜெயசிக்குறு" படை நடவடிக்கையால் முழுமையாக துவம்சம் செய்யப்பட்ட நிலப்பரப்பில் இருக்கும் வவுனியா வடக்கு கல்விவலயமும் எதிர்காலத்தில் கல்விச் செயலகத்தின் விளைநிலமாய் மாறும். அப்போது இக்கல்விமாநாடு கால வரலாற்றின் ஒரு பதிகை நிகழ்வாகும்.

## திலீபன் மருத்துவமனையின் சிறப்பு நடமாடும் சேவை





லெப். கேணல் தியாகி திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவு நாளை நினைவு கூரும் முகமாக திலீபன்மருத்துவமனையின் சிறப்பு நடமாடும் சேவையும் மருத்துவக் கண்காட்சியும் கடந்த 12 ஆம் திகதி முத்து ஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழு ஒத்துழைப்புடன் வைத்திய ஆலோசகர் திருமதி எழுமதி கரிகாலன் தலைமையில் கண்காட்சி நிகழ்வும் கருத்தரங்கும் நடைபெற்றது. (05)

## புதிய பதுங்கு குழிகளை புலிகள் அமைக்கின்றனராம்

### -கண்காணிப்புக்குழுவிடம் இராணுவம் புகார்

மூதூர் வெருகல் ஆற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிதாக பதுங்கு குழிகளை அமைத்து வருவதாக கண்காணிப்புக் குழுவிடம் சிறிலங்கா இராணுவம் முறையீடு செய்துள்ளது. கடந்த பத்தாம் திகதி முதல் சுமார் 30 விடுதலைப்புலிகள் பொழுகுச் சீலையினால் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொண்டு பதுங்கு குழிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அந்த முறையீட்டில் கூறியுள்ளனர். விடுதலைப்புலிகள் புதிதாக பதுங்கு குழிகளை அமைப்பது யுத்த நிறுத்த மீறல் என்று கூறி இந்த முறையீடு செய்யப்பட்டுள்ளது.

## வீதிப் போக்குவரத்து செயல்முறை கருத்தூட்டல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் வீதிபோக்குவரத்து தொடர்பான செயல்முறை கருத்தூட்டல் முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் றோய்காந் தலைமையில் கடந்த ஆறாம் திகதி நடைபெற்றது.

இதன்போது மூன்றுபேருடன் பயணித்த உந்துருளிகளும், வேகமாக செல்லும் உந்துருளிகளும் மறிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. அத்துடன் இரவு நேர றோந்து நடவடிக்கையினையும் குற்றத்தடுப்பு நடவடிக்கையினையும் மேற்கொண்டு வருகின்றனர். (20)




## 05.09.2005
## 11.09.2005

### 05

★ பாணாந்துறையின் வேகடப்பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் சிலர் மேற்கொண்ட கைக் குண்டுத் தாக்குதலில் இருவர் பலி, 9பேர் காயம்.

★ வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து மல்லாகம் நீதிமன்ற அகதிமுகாமில் வாழ்ந்து வரும் மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினிடம் மகஜர் கையளிப்பு.

★ கொழும்பு ராகமையில் இரு தமிழ் இளைஞர்களின் சடலங்கள் கைகால்களும், கண் களும் கட்டப்பட்ட நிலையில் மீட்பு.

★ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக யாழ்.சென்று திரும்பிய இராணுவ கப்டன் படையினரால் கைது.

★ அநுராதபுரத்திலுள்ள விடுதியொன்றின் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

★ இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொட ஆறுநாள் விஜயமாக புதுடில்லிபயணம்.

★ சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ளது தொடர்பாக ஆராய கொழும்புவந்திருந்த ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனானின் விசேடபிரதிநிதி லக்டார்பிராக்மி, சனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப்பேசினார்.

### 06

★ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வாகரைப்பிரதேசத்தில் கட்டுமுறிவு என்ற இடத்திலுள்ள விடுதலைப்புலிகளின் காவல்நிலை மீது சிறிலங்கா இராணுவ உடைதரித்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச்சாவு.

★ திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இரு கைக்குண்டுத்தாக்குதல்களில் இரு படையினர் உட்பட நான்கு பேர் காயம்.

★ அம்பாறை மாவட்டம் கல்முனை பாண்டிருப்பில்அமைத்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகத்தினை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் செயலகத்தினுள் சோதனைகளை மேற்கொண்டதுடன் நாவிதன் வெளியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை செயலகத்தினை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த ஆவணங்களுக்குத் தீ வைத்தனர்.

★ திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு தமிழ் இளைஞர்கள் காயம்.

### 07

★ மாவீரர் லெப். கேணல் மறவன் மாஸ்ரர் நினைவான தமிழீழ கடற்படை-துணைப்படையின் மூன்றாவது அணியினருக்கான பயிற்சி. லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் தமிழீழ கடற்படையின் துணைப் படை பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகின.



★ மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை. மேலும் ஒருவர் கைது.

★ கொடிகாமம் பிரதேசத்தில் குழு மோதல் ஏற்பட்டதில் எட்டுப்பேர் காயமடைந்தனர். அத்துடன் இயல்புநிலையும் பாதிப்பு.

★ மட்டக்களப்பு சின்ன ஊறணி கொக்கோகோலா சந்தியில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் பலி.

★ கொழும்பு ஆமர்வீதியில் வைத்து தமிழ் இளைஞர்கள் மூவர் பொலிசாரால் கைது.

★ இலங்கைக்கு வருகைதந்த ஐக் கிய நாடுகள் சபையின் தூதுவர் லக்டார் பிராக்மியை ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

### 08

★ கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற நோர்வேத்தரப்பின் யோசனை விடுதலைப்புலிகளால் நிராகரிப்பு. இவ்விடம்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்ற சூழலைக்கொண்டதில்லை என நோர்வேத்தரப்பு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர்களுடன் நடந்த சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.



★ சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜ பக்ஷவிற்கும், ஜே.வி.பி. யினருக்குமிடையிலான ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.



★ மட்டக்களப்பு தாளங்குடா சந்தியிலிருந்து மண்முனை விசேட அதிரடிப்படைமுகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த விசேட அதிரடிப்படை பொலிஸ்கூட்டுரோந்து மீது உந்துருளியில் வந்த இருவர் கைக்குண்டுவீசு, துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதில் இருவர் பலி, ஆறுபேர் காயம்.

★ கட்டுநாயக்கவிலிருந்து சவுதி-றியாத் நோக்கிப் புறப்பட்ட போயிங் 747sc781 ரக விமானத்தில் குண்டு இருப்பதாக வெள் தொலைபேசி செய்தியினால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டு பயணிகளை வெ எடுக்கப் போடப்பட்ட வழுக்குப்பாதை உடைந்து விழுந்ததில் ஒருவர் பலி, 50 பேர் காயம்.

★ இலங்கை அமைதிப்பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப்புலிகளே தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றனர். விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா அரசு நேரடிப் பேச்சுக்களை அவசியம் மேற்கொள்ள வேண்டுமென முன்னாள் அமெரிக்கத்தூதுவர் ரெசிட்டாஸ் காம்பர் அம்மையார் அமெரிக்காவின் வோஷிங்டனில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசியபோது தெரிவிப்பு.

### 09

★ அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் வீதியிலுள்ள ஓர் வீட்டின் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீச்சுநடத்தப்பட்டது.

★ வவுனியா மாவட்ட அரசியல்துறையினருக்கும் வவுனியா மாவட்டபோர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவருக்குமிடையில் புளியங்குளத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

★ சிறிலங்கா அரசு போரைநோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. நாம் பலத்துடன் அவர்கள் இருப்பைக் கேள்விக்குறியாக்குவோம். இவ்வாறு தமிழீழ கடற்படையின் துணைப் படை அணியினரின் பயிற்சி நிறைவு நிகழ்வில் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவிப்பு.



★ வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்படைத் தளபதி கங்கைஅமரன் துணைப்படைப் பயிசிப் பாசறையில் கடற்படைத்துணைப் படையின் இரண்டாவது அணியினரின் பயிற்சி நிறைவு இடம்பெற்றது.

★ வவுனியாவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இராணுவப் புலனாய்வாளர் உட்பட இருவர் பலி.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பிரதேசத்திற்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குமிடையிலான பொதுமக்கள் போக்குவரத்திற்கு சிறிலங்காப் படையினரால் தடைவிதிப்பு.

### 10

★ சாவகச்சேரியில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உந்துருளியில் வந்த குழுவினரால் வெட்டப்பட்டு படுகாயம்.

★ மன்னார் முசலிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி வந்த சிறிலங்கா பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மூவர் விடுதலைப்புலிகளினால் கைது.

★ வவுனியா பறையனாலங்குளம் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயம்.

### 11

மட்டக்களப்பு-பொலநறுவை எல்லைப்புறமான வெலிக்கந்தைப் பிரதேசத்தில் கருணா குழுவுடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும் இருவர் சுட்டுக்கொலை.

★ திருகோணமலை மாவட்டத்திலுள்ள அபயபுரச்சந்தியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கிரனேட் வீச்சில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட இருவர் காயம்.

★ வாழைச்சேனை பேய்த்தாளை பேருந்து நிலையமருகே பொலிசார் பயணம்செய்த உழவியந்திரம் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிதாக்குதலின் போது பொலிசார் நடத்திய பதில்த்தாக்குதலினையடுத்து பேருந்து ஒன்று சேதமடைந்தது.

# கல்வி நடவடிக்கைகளை தனியார் மயப்படுத்தும் அரசின் முயற்சிக்கெதிராக ஆசிரியர் சங்க நடவடிக்கை தீவிரம்

(கொழும்பு)

கல்வி நடவடிக்கைகளை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சும் உலக வங்கியும் இணைந்து தயாரித்த அறிக்கையை இரத்துச்செய்ய அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும்எடுக்காதது பாரதூரமான விடயம் என இலங்கை ஆசிரியர் சேவைசங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை நீடிக்குமானால் இலவசக்கல்வியைப் பெறும் வாய்ப்பு வறிய மாணவர்களுக்கு இல்லாமல் போகும் என இந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதனால் உத்தேச கல்வி மறுசீரமைப்பைத் தோல்வி அடையச் செய்ய நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது. (32)

## யானை தாக்கி பொலிஸ் அதிகாரி பலி

(கொழும்பு)

காட்டு யானைக்கூட்டம் ஒன்றை காட்டிற்குள் விரட்ட முனைந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் யானை ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு மரணமாகியுள்ளார்.

வாரியப்பொல பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமாகியுள்ளார் என வாரியப்பொல பொலிசார் தெரிவித்தனர். காட்டுயானைக் கூட்டம் ஒன்று கிராமத்தினுள் புகுந்து விட்டதாக மக்களினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அந்த யானைக் கூட்டத்தை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொழுதே இந்த அனர்த்தம் இடம்பெற்றதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (32)

# கொத்தணி வாக்குச் சாவடிகள் வடக்கு கிழக்கில் அமைக்க முடிவு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச வாக்காளர்களுக்கென கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைக்க தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.இது தொடர்பில் ஏற்கனவே தேர்தல் ஆணையாளர் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். இதன் அடிப்படையில் மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள அரசாங்கக்கட்டுப்பாட்டு பகுதிகளில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் நிமித்தம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மக்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (32)

# ரணிலின் பாரிய உருவப்படங்கள் மீது ஜே.வி.பி.யினர் தாக்குதல்

(கொழும்பு)

வன்முறையையும் அரசாங்க அதிகாரத்தையும் பயன்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப் பதாகைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.சிறிலங்கா சுதந்திர கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் உருவ பதாகைகள் எவ்வித சேதமும் இன்றி இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்கவின் பதாகைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றையவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது சனநாயக விழுமியம் என்ற போதிலும் ஜே. வி. பி.அதனை ஏற்றுக்கொள்ளாது தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமை கவலைக்குரிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# சுகாதார நிறுவனங்களின் நலன்புரிநிதி சுகாதார அமைச்சு தன் வசப்படுத்தியது


## தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சுகாதார நிறுவனங்களில் உள்ள நலன்புரி நிதிகளை சுகாதார அமைச்சு எவ்வித அனுமதியுமின்றி தன்வசப்படுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சரின் உத்தரவுக்கு அமைய சுகாதார அமைச்சின் செயலர் இதற்கான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக ஊழியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார நிறுவனங்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளின் மூலமே நலன்புரி நிதிகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.இந்த நிலையில் அமைச்சு குறித்த தீர்மானத்தை இரத்துச்செய்யுமாறு சுகாதார சேவை தொழிற்சங்க அமைப்பு அமைச்சரிடம் கோரியுள்ளது. (32)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## வைத்திலிங்கம் கிருஸ்ணதாஸ்

வடக்கு கிழக்கு மாகாண மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் மு/அனிஞ்சியன்குளம் த.க.வித்தியாலயத்தில் தரம்-07 இல் கல்வி பயிலும் செல்வன் வைத்திலிங்கம் கிருஸ்ணதாஸ் அவர்கள் முதலாம் இடம் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரை ஊக்கிவித்த பாடசாலை ஆசிரியை செல்வி. ஆறுமுகம் பத்மாஜினி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பாடசாலைச் சமூகம்*
*மு. அனிஞ்சியன்குளம் த. க. வி.*

*(6707)*

# 2005 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ.த) முடிவுகள்

| விஞ்ஞானபிரிவு | கணித பிரிவு |
|---|---|
| பா. மஞ்சுதன்-3A | ப. இளங்கோ-A,2C |
| யோ. யோகதீபன்-3C | உ. பிரசாந்-2C,S |
| எஸ்.பிரசாந்தன்-3C | |
| கி. அகல்யா-2C,S | |

நிர்வாகி ஆசிரியர்கள்
முல்லைக்கல்வி நிலையம்,
தண்ணீரூற்று.

(16610)

## சிறந்த பண்ணையாளர்களுக்கு பரிசில் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போருக்கிடையே சிறந்த பண்ணையாளர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி காலை 11.00 மணியளவில் ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய நிலையத்தின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் இரட்ணசபாபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பண்ணையாளர்களை பாராட்டிக் கௌரவித்ததுடன் இவர்களைப் போன்று ஏனைய பண்ணையாளர்களும் கால்நடை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி இது போன்ற போட்டிகளில் பங்குகொள்வதுடன் திறம்படவும் செயற்பட வேண்டும் என கருத்துக்கள் வழங்கப்பட்டது.

ஆடு, மாடு, கோழி ஆகிய கால்நடைகளைச் சிறப்புற வளர்த்தமைக்காக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்ட காசோலையினை ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் சிவகுமார் வழங்கி கௌரவித்தார்.

(05)

## பயிற்சி ஆரம்பமும் கட்டட திறப்புவிழாவும்

(ஒட்டுசுட்டான்)

கனேடிய பல்கலைக்கழக நிதியுதவியுடன் முல்லை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் வழங்கப்படவுள்ள மேசன், தச்சு, நீர்க்குழாய் பொருத்துதல், மின்னொட்டு ஆகியவற்றின் பயிற்சி நெறி எதிர்வரும் 22 ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது. இதே திகதியில் இதற்கான கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளது. (05)

# பதவி வெற்றிடம்

யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் கல்விசார் செயற்றிட்டங்களில் கடமையாற்றபொருத்தமான தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:-

**01.Project Officer-Monitoring Cell-01 Vacancy**

கல்வித்தகைமை:-

1. க.பொ.த.(உ.த) கணித/ வர்த்தகத்துறை
2. கணினி அறிவு (MS.Office-Excel)
3. ஆங்கிலத்தில் அறிக்கை தயாரிக்கக் கூடிய திறமையுள்ளவராக இருத்தல்.

*நியமனம் 1 வருடகால ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.
*வயதெல்லை 25 – 35
*படிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

பதவி:-

**02.Health Co-Ordinator - 02 Vacancies**

கல்வித்தகைமை:-

1. க.பொ.த.(உ.த) விஞ்ஞானத்துறை
2. கணினி அறிவு (MS.Office-Excel)
3. ஆங்கிலத்தில் அறிக்கை தயாரிக்கக் கூடிய திறமையுள்ளவராக இருத்தல்.

*நியமனம் 02.வருடகால ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.
*வயதெல்லை 25 – 35
*படிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொது:-

பட்டப் பரீட்சை பெறுபேற்றுக்குக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் ஏனைய கல்வித் தகைமை சான்றிதழ்களுடனும் 19.09.2005 காலை 10.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

த.குருகுலராசா,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.12816)

# பொதுமக்கள் பார்வைக்கு

தமிழீழப் போக்குவரவுக் கழகம் 14.09.2005 ஆம் நாள் நடைபெறும் தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடங்கும் அனைத்துப் பேருந்துப்பணிகளும் அன்றைய நாள் நடைபெறாது என்பதனை அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்,
பேருந்துப் பகுதி,
முல்லைத்தீவு.

(சி.12813)

# வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம், நெக்ரெக் (NECTEC)

## தொழில் பயிற்சியும் தொழில் வாய்ப்பும்

* பயிற்சி நெறிகள்

### 01. மேசன் பயிற்சி :-

கட்டுவேலை, கொங்கிறீட்வேலை,கம்பிவளைத்தல்,பூச்சுவேலை, மாபிள் பதித்தல், வெள்ளை வைத்தல்,கொங்கிறிட்பெட்டி அடித்தல்.

### 02. தச்சுவேலைப் பயிற்சி:-

மூட்டுக்கள், தளபாடங்கள் செய்தல், கட்டடப் பொருட்கள் செய் தல், கூரை வேலை, சிற்பவேலை, மட்டக்கூரை வேலை.

### 03, குழாய் இணைப்புப் பயிற்சி

PVC குழாய் இணைப்பு வேலை, G.I குழாய் இணைப்பு வேலை, கழிவுக்குழாய் பொருத்து வேலை,

| | | |
|---|---|---|
| * | பயிற்சிக்காலம் :- | மூன்று மாதம் |
| * | பயிற்சிக்காலக் கொடுப்பனவு:- | உருபா 6000/= அததுடன் உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும். |
| * | வயதெல்லை :- | 18 தொடக்கம் 30 வரை |
| * | சான்றிதழ் :- | பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். |
| * | தொழில் வாய்ப்பு :- | பயிற்சி முடிவின் பின்னர் வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NECTEC) திறமைக்கேற்ப பணி வழங்கப்படுவதுடன், பணிக்கேற்ப மாத ஊதியமும் வழங்கப்படும் |
| * | நேர்முகத் தேர்வு :- | 15 – 09 – 2005 தொடக்கம் உ – 09 – 2005 வரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கும்போது தங்களது சுயவிபர ஆவணங்களுடன்சமுகம் தரவும் |
| * | இடம் :- | வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம், **(NECTEC) கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி, (கிளி/மத்திய கல்லூரிக்கு அருகாமை)** (T.P 0212285917) |

(சி-12814)

# பனங்காமம்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளம்

## பாரவூர்தி ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான புத்தகப் பதிவுமுடைய பின்வரும் விபரப்படியான பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை மூலம் 19.09.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பனங்காமம்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமைப் பணிமனையில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250வும், மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா 10000 முமாக இவ் வைப்புக்களை ஏல விற்பனைக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே தலைமைப் பணிமனையில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுப் பதிவு செய்து கேள்வியில் பங்குகொள்ள முடியும். வாகனத்தை 13.09.2005 இல் இருந்து 28.09.2005 ஆம் திகதி வரை கடமை நேரங்களில் பாலிநகர் வவுனிக்குளத்தில் அமைந்துள்ள சங்க தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் இரண்டு நாட்களுக்குள் முழுப் பணத்தையும் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

வாகன விபரம்
லொறி அசோக் லேடன் 43/8263
இயந்திர இலக்கம் CWE 178304
அடிச்சட்ட இலக்கம் LALG 01633

தலைவர்,
பனங்காமம்பற்று பல நோ.கூ.சங்கம்,
பாலிநகர்,
வவுனிக்குளம்.

(சி.12815)



# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ்



14-09-2005

## தேரேறி வருகிறாள் தெல்லிப்பழை துர்க்கையம்பாள்



"மகோற்சவ நாயகி துர்க்கை அம்பாளின்
மலரடி போற்றி வணங்குவதும் யாமே
அற்புதத் தெய்வம் தேரிலே ஏறி
அசைந்து வருவதைப் போற்றுவம் யாமே
அவலங்கள் அகற்றி இன்னருள் நல்கும்
அம்மை துர்க்கையைப் பரவுவம் யாமே
துர்க்கா சரணம் சரணம் என்று
துள்ளித் துள்ளிப் பாடுதும் யாமே"

தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



சிறப்பிதழாக்கம் - காரையூரான்

**தெல்லிப்பழை துர்க்காதேவி அருள்பெற்று அனைவரும் இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றோம்**


சகல மங்கள
வைபவங்களையும்
சிறந்த முறையில்
படம் பிடித்திட.
சோதி ஸ்ரூடியோ
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.
கிளை - ஏழாலை.
0777-6592346 (சி-12774)

இலங்கையில்
எப்பாகத்திற்கும் சென்று வர
எமது
போக்குவரத்துச் சேவையை
நாடுங்கள்
டனுஜன்
போக்குவரத்துச் சேவை
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.
T.P 0712-347548 (சி-12775)

கட்டடங்களுக்கான
ஜன்னல் வகைகள்,
லான் மாஸ்ரர் பெட்டிகள்,
மரம் அரியும் பாட்டுவாள்,
றோதைவாள்
விற்பனையாளர்கள்
சிறி
இரும்புத் தொழிலகம்
காங்கேசன்துறை வீதி,
T.P 0712-347548 மல்லாகம். (சி-12776)

சயன்
உணவகம்
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.
உரிமையாளர்: வை.ரவி
(சி-12777)

தலைவர்
பணிப்பாளர்கள்
பணியாளர்கள்
தெல்லிப்பழை
ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை. (சி-12780)

மங்கையர் மனங்கவரும்
தரமான நகைகளுக்கு
என்றும் நாடுங்கள்
புதிய
மதுசன்
நகைமாடம்
(முன்னர் வன்னியில் இயங்கிவந்த நிறுவனம்)
பஸ் நிலையம் முன்பாக, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
பூஞ்சோலை நகைமாடம்
மன்னார் வீதி, பூநகரி.
அபிரா நகைமாடம்
ஜெயபுரம்.
(சி-12779)

போட்டோ
சண்கோ
DIGITAL COLOUR LAB
(புகைப்படப்பிடிப்பில் முதன்மையானவர்கள்)
204, கண்டிவீதி,
வவுனியா.
024-2221130.
84, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (சி-12778)


முத்துமாரி
நகைமாடம்
உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்
இல:-78 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-12781)





யாழ். நகரில்...
என்றும் மலிவு
விலையில்
நிறைந்த ரகங்கள்
நிகரில்லா தரங்கள்
கிறீன் பலஸ் எம்போறியம்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி (சி-12782)

சன்சிகா
நகையகம்
சிறியவர் முதல்
பெரியோர்வரை
யாவரும் விரும்பி அணியும்
தங்க ஆபரணங்களை
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய இடம்
114, BAZAAR STREET
VAVUNIYA
TEL:-024-2224028
யாழ். கணேசா நகையகம்,
124, செட்டியார்தெரு,
கொழும்பு-11
(சி-12783)





# இங்கிலாந்தின் 18 ஆண்டு தவத்திற்கு மைக்கல் வோன் தலைமையில் பலன் கிடைத்தது

இங்கிலாந்தின் 18 ஆண்டுகால தவத்திற்கு நேற்று முன்தினம் தான் பலன் கிடைத்தது. மைக்கல் வோன் தலைமையிலான அணி சொந்த மண்ணில் ஆஷஸ் கோப்பையைக் கைப்பற்றி சாதித்தது. பீற்றர்சன் பிரமாத சதம் அடிக்க ஓவல்டெஸ்ட் சமனானதுடன் தொடரையும், இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனால் தொடர்ந்து எட்டு முறை ஆஷஸ் கோப்பை வென்ற அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் தகர்ந்தது.

தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற முன்னிலையில் இருக்க முக்கியமான ஐந்தாவது டெஸ்ட் லண்டன் ஓவல் அரங்கில் நடந்தது. இப்போட்டியை சமன் செய்தாலே தொடரை வெல்லலாம் என்ற கனவுடன் இங்கிலாந்து களம் புகுந்தது. அவுஸ்திரேலியாவோ வென்றாகவேண்டிய கட்டாயத்தில் இருந்தது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 373, அவுஸ் திரேலியா 367 ஓட்டங்களை எடுத்தன. நான்காம் நாள் ஆட்டமுடிவில் இங்கிலாந்து இரண்டாம் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஐந்தாம் நாளில் வோர்ன் மிரட்ட இவரது சுழலில் ரெஸ்கொதிக் (33), பிளிண்டொப் (8) கோலிங்வூட் (10) ஆட்டமிழந்தனர்.

மெக்ராத் வேகத்தில் தலைவர் வோகன் (45) பெல் (0) வெளியேற இங்கிலாந்துக்கு நெருக்கடி ஆரம்ப மானது. ஆனால் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பீற்றர்சன் சதம் அடித்து அணியைக் காப்பாற்றினார். 158 ஓட்டங்கள் எடுத்த இவர் மெக்ராத்தின் பந்தில் ஆட்ட மிழந்தார். நல்ல ஒத்துழைப்பு தந்த கைல்ஸ் அரைச்சதம் (59) அடித்தார். இறுதியில் இங்கிலாந்து இரண்டாம் இன்னிங்சில் 335 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட் டையும் இழந்தது. அவுஸ்திரேலிய தரப்பில் வோர்ன். ஆறு, மெக்ராத் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் 342 என்ற வெற்றி இலக்குடன் அவுஸ்திரே லியா களமிறங்கியது. ஹார்மிசன் நான்கு பந்துகள் வீசிய நிலையில் போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் முடிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா இரண்டாம் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி நான்கு ஓட்டங்கள் எடுக்க, போட்டி சமனானது. இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி யது.


தென்னாபிரிக்காவில் பிறந்த பீற்றர்சன் இங்கிலாந்தின் புதிய ஹீரோவாகத் திகழ்ந்தார். இக்கட்டான நேரத்தில் களமிறங்கி கலக்கிய இவர் 187 பந்தில் 158 ஓட்டங்கள் விளாசி போட்டி சமனாவதை உறுதி செய்தார். டெஸ்ட் வாழ்வில் முதல்சதம் அடித்த இவர் 15 பவுண்டரி அதிக சிக்சர் (ஏழு) விளாசி சாதித்தார். ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச்சென்றார்.

இத்தொடரில் 40 விக்கெட் வீழ்த்திய அவுஸ்திரேலியா வின் வோர்ன் சகலதுறைவீரராக அசத்திய இங்கிலாந் தின் பிளின்டொப் தொடர் நாயகன் விருதைப்பெற்றனர். தொடரின் சிறந்த வீரருக்காக முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட காம்ப்டன் மில்லர் விருதையும் பிளின்டொப் பெற்றார்.

· நேற்று டெஸ்ட் கிரிக்கெட்டில் பத்தாவது முறையாக பத்து விக்கெட் வீழ்த்தினார். அவுஸ்திரேலியாவின் சுழல் மன்னன் ஷேன் வோர்ன் முதல் இன்னிங்சில் ஆறு விக்கெட்டைக் கைப்பற்றிய இவர் இரண்டாம் இன்னிங்சி லும் ஆறு விக்கெட் வீழ்த்தினார். 32ஆவது முறையாக ஐந்து விக்கெட் கைப்பற்றினார். 600 விக்கெட் மைல் கல்லைக் கடந்த முதல் வீரர் என்ற பெருமைமிக்க இவர் இத்தொடரில் 40 விக்கெட் வீழ்த்தி சாதனை யடைந்தார். இதன்மூலம் இங்கிலாந்துக்கு எதிராக அதிக விக்கெட் வீழ்த்திய சகநாட்டு வீரரான டெனிஸ் லில்லியின் (167) சாதனையை முறியடித்தார். வோர்ன் தற்போது 172 விக்கெட் கைப்பற்றியுள்ளார். இங்கிலாந்து மண்ணில் தனது கடைசி டெஸ்ட் தொடரில் விளையாடிய இவர் தொடரை இழந்த சோகத்துடன் விடைபெற நேர்ந்தது.







# தனது வீரர்களை வானளாவ புகழும் வோகன்



தனது அணி வீரர்கள் ஓவல் மைதானத்தில் காட்டிய ஆச்சரிய மிக்க திறமையே அவுஸ்திரேலிய அணியை இரண்டுக்கு ஒன்று என்ற ரீதியில் வென்று ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்ற முடிந்தது என இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் ஸ்மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

உணர்வுமிக்கதான மகிழ்ச்சிகர மான ஒரு தொடரே இது எனக் கூறிய அவர் வீரர்களின் நிறைந்த முகாமைத்துவத்தைப் பாராட்டுவதாகத் தெரிவித்தார். இத் தொடரில் நான்கு முறையும் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றமை அதிஷ்ரம் எனக் குறிப்பிட்டவோகன் எனினும் எங்களின் கடுமையான உழைப்பும் கைகொடுத்தது என்றார்.

எவ்வாறேனும் இறுதிப் போட்டியில்; இறுதிநாளில் 67 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டும், 126 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டும் இழந்திருந்த நிலையில் அவுஸ்திரேலிய கிண்ணத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் என்றே தான் நினைத்ததாக அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியர்கள் முதல் மூன்று விக்கெட்டுக்களையும் விரைவில் விழுத்தியதால் இளம் வீரர் பீற்றர்சனைக் கவனமாக ஆடி நிலைத்திருக்குமாறு கூறினோம் என்றும் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் பீற்றர்சனை வெளி யேற்ற எவ்வளவோ பாடுபட்டார்கள் என்றும் வோகன் தெரிவித்துள்ளார்.

பீற்றர்சன் ஆட்டத்தைச் திசைத்திருப்பி விட்டார் என்று கூறியுள்ள வோகன் இந்தத்தொடர் முழுதும் பொண்டிங்கின் அவுஸ்திரேலிய அணி தமக்கு மிகவும் அழுத்தத்தைக் கொடுத்து வந்ததாகவும் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு முதல் ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றத் தமது நாட்டு அணித் தலைவர்கள் மிகுந்த முயற்சியெடுத்திருப்பினும் அதன் பிறகு கிண்ணத்தைப் பெற்ற அணித் தலைவர் என்ற பெருமையை வோகன் பெற்றுள்ளார். அத்துடன் அவுஸ் திரேலிய அணியுடன் போட்டியிடு வது எவ்வளவு கடினம் என்பதை அலெக்ஸ்டுவர், நாசர் ஹுசைன், அர்த்தர்ட்டன் போன்றோர் நன்கு அறி வர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.






தங்களுக்கே வெற்றி என இங்கிலாந்து மண்ணில் கால் பதித்த அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் மற்றும் மெக்ராத் தோல்வி முகத்துடன் அவசர அவசரமாக நாடு திரும்புகின்றனரா?



# பாராட்டுகின்றோம்



மன்னார் மடு வலயத்திற்கு உட்பட்ட தட்சனாமருதமடு அ.த.க. பாடசாலை மாணவி கனகரட்ணம் குமுதினி 21 வயதுப் பிரிவில் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் 800, 1500, 3000 மீற்றர் போட்டி களில் முதலிடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியான போட்டிக்குத் தெரி வானதையிட்டு பாடசாலை சமூகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

# ஹராரே டெஸ்ட் போட்டி சிம்பாப்வே 265/7 விக்கெட்



சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், சிம்பாப்வே அணிக்கும் இடையில் ஹராரேயில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் ஆடும் சிம்பாப்வே அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணித்தலைவர் தைபு முதலில் துடுப்பாடத்தீர்மானித்தார்.

ஆரம்ப விக்கெட்டுக்கள் சொற்ப ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டபோதும், டுபின், இப்ரகிம், தைபு, பங்குவா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் டுபின் 56 ஓட்டங்களையும், இப்ரகிம் 24 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டமிழக்காது தைபு 61 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது பங்குவா 35 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் சகீர்கான் மூன்று விக்கெட்டுக்களையும், பதான், கும்ளே ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# பங்களாதேஷ் அணி தடுமாற்றம் வெற்றிநோக்கி சிறிலங்கா அணி





பங்களாதேசுக்கு எதிரான முத லாவது டெஸ்ட் போட்டியில் சிறி லங்கா அணி வெற்றி வாய்ப்பை பிரகாசமாக்கியுள்ளது.

பிரேமதாச விளையாட்டு மைதா னத்தில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியின் இரண்டாம் நாளான நேற்று தனது இரண்டாவது இனிங் சுக்காக துடுப்பெடுத்தாடும் பங்களா தேஷ் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற் றுள்ளது.

முன்னதாக முதல் இனிங்சில் பங்களாதேஷ் பெற்ற 188 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய சிறிலங்கா தனது முதல் இனிங்சில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 370 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் டில்சான் 86 ஓட்டங்களையும், சமரவீர 78 ஓட்டங்களையும்; ஜெயவர்த்தன 63 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் ரபீக் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனால், சிறிலங்கா அணி 182 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடும் பங்களாதேஷ் ஒன்பது ஓவர்கள் நிறைவில் 36 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்துள்ளமை அவ்வணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் ஒரு ஓவர் பந்து வீசி ஓட்டமெதனையும் கொடுக்காது இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## சிந்தனைக்கு



போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# சதிக்குள் சிக்காதீர்!

யாழ்.குடாநாட்டில் குழுக்களுக்கிடையில் மோதல் திருட்டு, கலாச்சாரச் சீர்கேடு மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் என்பன பெரிதும் அதிகரித்த போக்கில் காணப்படுவதை அண்மைய சம்பவங்கள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன. அதிலும், அண்மைய சம்பவங்கள் முன்னரைவிடத் தீவிரம் பெற்றவையாகவும் உள்ளன.

முன்னர் அரிதாக இடம்பெறும் மோதல்கள் பெரும்பாலும், குடும்பச் சச்சரவுகளினால் ஏற்படுபவையாகவும், தடிகள், பொல்லுகள்,கற்கள், மீறிச் சென்றால் கம்பிகள் போன்ற பொருட்களே பாவிக்கப்படுவதுண்டு. ஆனால் தற்பொழுது அவை குடும்ப மோதல்களாக அல்லாமல் பெரும் குழு மோதல்களாக துப்பாக்கிகள், கைக்குண்டுகள்,வாள்கள் போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப் படுபவையாகவுள்ளன. அதாவது இவ் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் இதற்காகத் தம்மை ஏற்கனவே தயார்படுத்திக் கொண்டவர்களாகவுள்ளனர். அன்றி தேவை ஏற்பட்டவுடன் அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்து இன்று அதிக செறிவில் சிறிலங்கா ஆயுதப்படையினர் நிலைகொண்டுள்ள பகுதி யாழ். குடாநாடே ஆகும். அங்கு சுமார் 35.000 இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். பாதுகாப்பு ஏற்பாடு என்ற ரீதியில், குவிக்கப்பட்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் யாழ்.குடாநாட்டில் சந்து பொந்துகள் யாவற்றிலும் நிறைந்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் இவ் ஏற்பாடானது யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தினை முற்றிலுமாக கண்காணிக்கும் நோக்கிலானதாகும். அதாவது விடுதலைப் புலிகளின் அசைவு யாவற்றையும் கண்காணிக்கும் நோக்கம் கொண்டதாகும். அதுமட்டுமன்றி சிறிலங்காப் பொலிசாருடன் இணைந்தும் ஆயுதப்படைத்தரப்பு செயற்பட்டு வருகின்றது. எடுத்துக்காட்டாகத் தற்பொழுது போக்குவரத்து விதிகளை அமுல்படுத்தும் பொலிசார் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே செயற்பட்டும் வருகின்றனர்.

இத்தகையதொரு பாதுகாப்புச் சூழ்நிலையில் கோஷ்டி மோதல்களும், அதிகரித்த திருட்டுக்களும், கலாச்சார சீர்கேடுகளும் நடைபெறுகின்றன எனில், இதற்கும் சிறிலங்கா ஆயுதப்படைக்கும், பொலிசாருக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்பதையும் ஆயுதப் படைத்தரப்பாலும், பொலிசாராலும் இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது எனக் கூறுவதையும் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

யாழ்.குடாநாட்டில் இன்று இடம்பெறும் வன்முறைகள், மோதல்கள்,திருட்டுக்கள் என்பன ஆயுதப்படைகளின் முன்னிலையிலேயே நடைபெறுகின்றன என்பதே நிதர்சனமாகும். ஆனால் அவற்றைத் தடுத்து நிறுத்தவோ அன்றி கட்டுப்படுத்தவோ சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு விரும்பவில்லை. அன்றித் தயாராக இல்லை என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.

ஏனெனில், யாழ்.குடாநாட்டில் மட்டுமல்ல, தமிழர் தாயகம் எங்குமே தமிழ் மக்கள் ஐக்கியத்துடனும்,ஒருமைப்பாட்டுடனும் இருப்பதையும், தமது உரிமைக்காக அணிதிரண்டு குரல்கொடுப்பதையும் சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் அதன் ஆயுதப்படையினர் விரும்பவில்லை. இதற்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டால் தமிழர் தாயகத்தில் தமது இருப்பு கேள்விக்குள்ளாகிவிடும் எனச் சிறிலங்கா தரப்புக்கருதுகின்றமையே காரணமாகும்.

இதன் காரணமாகவே ஒரு புறத்தில் தமிழர் தாயகத்தில் காணப்படும் சிறிய பலவீனங்களைப் பெரிதுபடுத்தி மோதல்களை உருவாக்க முனைகிறது. இன்னொருபுறத்தில் ஒற்றுமையாக இயங்கும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மட்டத்தில் ஒழுக்கச் சீர்கேடுகளையும், துர்நடத்தைகளையும் ஊக்குவிக்க முற்படுகின்றது. இதன் மூலம் இவர்களைச் சமூகவிரோதிகளாக்கிவிட முனைகிறது.

அதாவது தமிழ் தேசியத்தின் வலுவைச் சிதறடிக்கும் நோக்கமே சிறிலங்கா ஆயுதப்படையினரின் இந்நடவடிக்கைக்குக் காரணமாகும். இதன் மூலம் ஒருபுறத்தில் சமூகத்தில் காணப்படும் ஒற்றுமையைச் சீர்குலைத்தலும், மறுபுறத்தில் இளையதலைமுறையைத் தவறான வழியில் செல்வதற்குத் தூண்டிவிடுதலும் அதன் நோக்கமாகும். இதற்கு வன்முறையை மட்டுமல்ல, போதைப்பொருள் பாவனை, ஒழுக்கச் சீர்கேட்டைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளுக்குச் சந்தர்ப்பங்களை வழங்குதல், அவற்றிற்கான வழிகளைத் திறந்துவிடுதல் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகிறது.

ஆகையினால் தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர் சமுதாயம் சிங்களப் பேரினவாத சக்தியின் இத்தகைய சதிச் செயலைப் புரிந்து கொண்டு செயலாற்ற முன்வரவேண்டும். அதாவது எமது தேசியத்தைப் பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது செயற்பட முற்படுபவர்களேயானால் அவர்கள் தமிழ் தேசியத்திற்கு ஊறுவிளைவிப்பவர்களாகவும், அதனைப் பலவீனப்படுத்துபவர்களாகவுமே இருக்க முடியும். அதாவது சிங்களப் பேரினவாத சக்திகளின் குறிக்கோளை நிறைவு செய்பவர்களாகவே இருப்பர். இதனைத் தமிழ் தேசவிரோத நடவடிக்கையாகக் கொள்ளுதல் தவறாக இருக்க மாட்டாது.




# "வன்முறைகளற்ற விடுதலைப் பாதையில் ஜே.வி.பி"

## புதிய அமைப்பு கொழும்பில் உருவாக்கம்

வன்முறைகள் அற்ற விடுதலைப் பாதையில் ஜே.வி.பி என்ற புதிய அமைப்பொன்று உருவாகியுள்ளது. ஜே.வி.பி இன்று திசைமாறி, இனவாதம், மதவாதம் பேசி, தனது அடிப்படையான கொள்கைகளை மறந்து செயற்படுவதாகவும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந்த வகையில் ஜே.வி.பி யின் நிறுவுனர் றோகண விஜயவீரவின் கொள்கைகளுக்கு [...]றிலும் மாறுதலான பாதையில் செல்லும் இன்றைய போலி ஜே.வி.பி அமைப்பினை இந்தப் புதிய அ[...] கண்டித்துள்ளது.

ஜே.வி.பியின் இப்போதைய கடும் போக்குகளையும் சூழ்ச்சிகளையும் மக்களுக்கு அம்பலப்படுத்துவதுடன். இந்த நாட்டு மக்களை வன்முறைகள் அற்ற முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதே இந்த அமைப்பின் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கொள்கைகள் மற்றும் தற்போது ஜே.வி.பி என்று கூறிக்கொண்டு பேரினவாதக் கடும் போக்குடன் செயற்படுவோர் பற்றி நாட்டு மக்களுக்கு தெளிவுறுத்தவுள்ளதாகவும் இந்த அமைப்பின் சர்வதேச அமைப்பாளர் பேராசிரியர் சுபா சந்திரா தெரிவித்துள்ளார். (32)

# க.பொ.த உயர்தரபரீட்சையில்; மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கண்டாவளை ம.வி**

**கலைப்பிரிவு**

சின்னத்தம்பி பிரதீபன். ஏ.2சி, வேலாயுதம் சுஜாதா. பி, 2சி, இராசையா அருந்தவமலர் பி.சி.எஸ், கந்தசாமி ஈழப்பிரியா 2சி, எஸ், வீரசிங்கம் ஜெயநந்தினி 2சி, எஸ்,

**தருமபுரம் ம.வி**

**வர்த்தகபிரிவு**

பரமசாமி கமலநாதன் ஏ.2பி, வேலுப்பிள்ளை தியாகினி 2பி.சி, இரத்தினம் விஜயலட்சுமி 3பி, ஜீவரத்தினம் துவாரகா பி, 2சி, செல்லத்தம்பி அஜித்குமார் பி, 2சி

**கலைப்பிரிவு**

கவிதா சந்திரசேகரன் ஏ.பி.சி, சித்திரா வில்வரத்தினம் பி,சி,எஸ், நிசாந்தி கிருஸ்னா ராதாகிருஸ்னா ஏ,சி.எஸ், சாந்திகிருஸ்னா ராதா கிருஸ்னா ஏ,சி.எஸ், கலையரசி தர்மராசா ஏ,2சி

**முருகானந்தா ம.வி.**

**கலைப்பிரிவு**

த.பார்த்தீபன் ஏ, 2பி, அ.தற்பரா ஏ, 2சி

**கணிதபிரிவு**

சி.பிரசாந்த் 2சி,எஸ்

**முள்ளியவளை**

**வித்தியானந்தாக் கல்லூரி**

**கணிதம்**

ச. மாலவன் ஏ, 2சி, ப.இளங்கோ ஏ, 2சி, உ. பிரசாத் 2சி, எஸ்

**உயிரியல்**

பா. மஞ்சுதன் 3ஏ, ம.முகுந்தன் பி.சி.எஸ், ந.கௌரிசங்கர சர்மா 3சி, யோ. யோகதீபன் 3சி, இ.குகப்பிரியா3சி, பி.கௌசீகன் 3சி, நா. பிரசாந்தன் 3சி,

**வர்த்தகம்**

கி.நிருசா 3ஏ, த.சுகந்தினி 2ஏ, பி.செ. வசீகரன் 2ஏ.சி, ஜெ.நிரஞ்சனா 2ஏ.சி, வினோதன் ஏ.பி.சி

**கலை**

ம.சுபத்திரா 2ஏ,பி, சி.குமரவேள் 2ஏ,சி, த.கார்த்திகா ஏ,2பி, ஜெ.ஜான்சி 2ஏ,பி, அ.றேகா ஏ, 2பி.

**கிளிநொச்சி ம. கல்லூரி**

**உயிரியல்பிரிவு**

வே. இளங்குமரன் 2ஏ,பி, செ.சிவசங்கரி 3பி,செ கிருஷாந்தன் 3பி, சி.எழில்வேள் 2பி.சி, ந.நிஷாந்தினி பி,2சி. ம.தர்சினி 3சி, மா. துசாகரன்பிசி,

**கணிதபிரிவு**

சி.சஞ்சையன் பி,2சி,க. அரங்கன் ஏ,2சி,ம. அமலன் 3சி,பா கங்காதீபன் 2சி,எஸ், த. சுதர்சினி 2சி,எஸ, ம.தர்சிகன் சி, 2எஸ்.

**கலைப்பிரிவு**

சி.சிவகௌரி 2ஏ,சி, ச.யோகரதி ஏ.பி.சி, வி. நரேஸ்குமார் ஏ,2பி,மே.விமலினி 2ஏ. சி, கு றாஜி 2ஏ.பி

**வர்த்தகபிரிவு**

நா. மயூரன் 3ஏ, அ. நளாயினி ஏ.2பி, வி. நிதர்சன் 2ஏ,பி, உ. ஜெயச்சந்திரபிரகாஸ் ஏ,2பி. பியாமினி ஏ.பி.சி ப ரவிச்சந்திரன் ஏ.பி.சி

**கிளிநொச்சி இந்துக்கல்லூரி**

**விஞ்ஞான பிரிவு**

ச. பிரசாத் 3சி, அ.காயத்திரி 2பி,எஸ், க.தவசீலன் 2பி,எஸ்,

**வர்த்தகபிரிவு**

செ.கஜன் 2ஏ,பி, இ.லோகரூபன் 3ஏ, நே.நிமலராஜ் 2ஏ,பி.

**கணிதபிரிவு**

ச.கோபிதாஸ் 2பி,சி, கு. மயூரன் பி,2சி,

**கலைப்பிரிவு**

வி. மதிவதனி 3ஏ.

**கிளிநொச்சி ம.வி.**

**கலைப்பிரிவு**

லோ.சிருஸ்டீனா 2ஏ அ.றெஜினோல்ட் எலட்டன் ஏ,2

**வர்த்தகபிரிவு**

கோ. விஜயமதன் 2ஏ இ.உமாரேகா 2ஏ,பி.

**கிளிநொச்சி கனகபுரம் ம.வி**

**கலைப்பிரிவு**

யோ. அனுசியா 2ஏ,பி, பா. தயாணி 2ஏ,சி.

**கிளிநொச்சி புனித திரேசா பெ.க. கலைப்பிரிவு**

க.கலையரசி ஏ,பி,சி

**புதுக்குடியிருப்பு ம. க.**

**கலைப்பிரிவு**

ப.சுபகரன் 2ஏ,பி, ச.சத்தியராஜ் 3ஏ, கு.விக்னேஸ்வரன் ஏ,2பி, ந.நளாயினி 2ஏ,பி, ச.சங்கீதா ஏ,2பி, சி.றமணி 2ஏ,பி, ப. நதியா 2ஏ.பி, ப.கமலேஸ்வரன் 2ஏ,சி, பெ.ஸ்டீபன் ஏ,2பி ச.யோகானந் ஏ,2பி, ம.கஜேந்திரன் 2ஏ,சி, பே.நதியா ஏ,பி,சி, வி.நிறஞ்சனா ஏ,2பி, ம.ஜெறோம் ஏ,2பி, சு.தங்கேஸ்வரி ஏ,2பி, சி அஜந்தன் ஏ,2பி, இ.ஜெயசெல்வி 3பி, அ.அஜந்தினி ஏ,பி,சி, ரு.சுதர்சன் ஏ,2பி, ம.றோகினி ஏ,2பி, ந.கஜானா ஏ,பி,சி, ஆ.ஜெயநேசன் ஏ,பி,சி, ம.மயூரன் பி,2சி, ஜெ.கடீசன் ஏ2பி,

**உயிரியல்**

இ.மரியோ மசினத்தீபன் 3ஏ, க.உதயசீலன் 3பி, க.பகீரதன் பி,2சி, நா.செந்தூரி 2பி,சி.

**கணிதம்**

அ.போல்ராஜ் பி,2சி, இ.அபினவ் 2சி,எஸ், நா.சௌமியா பி,2எஸ், தெ.தேவசியாளினி பி,2எஸ்,

**வர்த்தகம்**

அ.அனுஸ்ரா ஏ,2பி, ப.ரேவதி ஏ.2பி, சே.கரீஸ்செல்வக்குமார் 2ஏ,சி, க.பத்மப்பிரியா ஏ,பி,சி, க.மேரிகனிஸ்ரா ஏ.பி,சி, சி.மேகலா

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் மீளக்குடியேறியோர் விபரம் திரட்டல்!

## -குடாநாட்டில் படையினர் நடவடிக்கை-

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் மீளக்குடியேறியவர்களின் விபரங்களைச் சேகரிப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர். கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் செல்லும் இவர்கள் 2002ஆம் ஆண்டிற்கு பின்னர் மீளக்குடியேறியவர்களின் விபரத்தை தரும்படி கேட்டுள்ளனர்.

சில கிராம அலுவலர்கள் குறிப்பிட்ட விடயங்கள் தம்மால் தரப்பட முடியாதெனவும், தமது மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவர்கள் சம்மதம் தெரிவித்தால் மட்டுமே வழங்க முடியும் எனத் தெரிவித்து திருப்பி அனுப்பியுள்ளார்கள். ஆனாலும் சில இடங்களில் இராணுவத்தினர் நேரடியாக வீடுகளுக்குச் சென்று ஏற்கனவே இராணு வத்தால் வழங்கப்பட்டசிறப்பு அடையாள அட்டையை கேட்டு பதிவு செய்து வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் கடும்சினத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இதற்கு அவர்கள் எதிர்ப்பும் தெரிவிக்கின்றார்கள். 514ஆவது இராணுவத்தின் கட்டளைப் பணியகத்தினர் இத்தகைய செயற்பாட்டில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளதுடன் கிராம அலுவலர்களிடம் சென்று விபரங்களைப்பெற முயற்சித்த போதிலும் அவர்களுக்கான விபரங்களை வழங்கமுடியாதென கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும். தற்போது இவ் இராணுவக்கட்டளைத்தலைமையகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அரியாலைப் பகுதில் வயல் செய்கையில் ஈடுபட அனுமதிப்பதற்கு கூட தற்காலிகமான சிறப்பு அடையாள அட்டைகள் படத்துடன் கொடுத்தே அனுமதித்துள்ளார்கள். இவ்அடையாள அட்டை கூட ஆறுமாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் முறையில் வழங்கப்பட்டுள்ளது என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.

# சு.க.வின் நீண்டகால கொள்கையை மகிந்த காட்டிக்கொடுத்துவிட்டார்

## - வெற்றி குறித்தும் அநுரா நம்பிக்கையிழப்பு

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தல் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள், பிரச்சாரப் பணிகள் என்பனவற்றால் சாதகமான வெற்றி வாய்ப்பு கிடைக்குமென நம்பிக்கையை தான் கைவிட்டுள்ளதாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க லண்டனிலிருந்து மின்னஞ்சல் மூலம் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

விசேட செய்தி மூலம் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; தமது கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி நீண்ட காலமாக பாதுகாத்துவந்த கொள்கையை ராஜபக்ஷ காட்டிக் கொடுத்துவிட்டுள்ளதால் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதில் தனக்கு நம்பிக்கையில்லை என்றும் தனது கட்சி வேட்பாளர் ஒருவர் தீவிரவாதக் குழு ஒன்றுடன் கைகோர்த்துள்ளதால் கட்சிக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக சனாதிபதியும் தானும் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமயவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது உண்மையில் அழிவுக்கான நடவடிக்கை எனத் தெரிவித்துள்ள அவர் ஜே.வி.பி.யுடன் கூட்டணி ஏற்படுத்த மூலகாரணமான தான் தற்போது அதைப் பற்றி மிகவும் வருந்துவதாகவும் கூறியுள்ளார். ஜே.வி.பி.யினரைப் பற்றி நிறையக் கூறவிருப்பினும் தாம் மனவேதனையுற்றிருப்பதால் மேலும் கருத்துக் கூற முடியாது என்றார்.

தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் தானும் ஒழுக்கம் காணப்படாததால் கட்சியின் நற்பெயருக்கு களங்கமேற்பட்டதாகக் தெரிவித்துள்ள அநுரா பண்டாரநாயக்க மகிந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சனாதிபதி தயாராகவே உள்ளார் எனக் கூறியுள்ளார்.

### சனாதிபதியின்.:...

விளக்கம் கோரி கடும் தொனியில் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். அதேவேளை ஹெல உறுமயவுடனும் உடன்படிக்கையை தவிர்த்துக் கொள்ளுமாறு மகிந்த ராஜபக்ஷவிடம் கோரப்பட்டிருந்தது.

ஆனால் ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளை புறக்கணிக்க மகிந்த ராஜபக்ஷ தயாராக இல்லை என்ற நிலைப்பாடு உறுதியாக்கப்பட்டிருப்பதால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சனாதிபதி சந்திரிகா தீவிரமாக ஆராய்ந்ததாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் முழுவதும் ஓய்வின்றி பல சந்திப்புக்கள் சனாதிபதி மாளிகையில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. இதில் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனான சந்திப்பே நீண்ட நேரம் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் முக்கிய அமைச்சர்கள் பலரையும் அழைத்து இரகசிய ஆலோசனை நடத்தப்பட்டதாகவும் சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களுடனும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசனை நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

சனாதிபதி அடுத்தடுத்து சில அரசியல் மாற்றங்களை செய்யலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. எதுவெவ்வாறாயினும் சனாதிபதியின் நியூயோர்க் பயணத்தின் பின்னர் திடீர் மாற்றங்கள் நிகழக்கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

### உ/த...

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களாவர்.

சிவப்பிரகாசம் மயூரன், நாகேந்திரன் பாணுகோபன், சபாநாதன் தனீசன் ஆகியோர் கணிதபிரிவில் அகில இலங்கை ரீதியாக முதலாம், நான்காம், ஐந்தாம் இடம்பெற்றவர்கள்.

உயிரியல் பிரிவில் பொன்னுத்துரை சிவபாலன் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

கணித பிரிவில் முதலிடம் பெற்ற மயூரன் 1986 ஆம் ஆண்டு தென்மராட்சியில் பிறந்தவர்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளுடன் தேர்வடைந்த மயூரன் 1997இல் யாழ். இந்துக் கல்லூரியில் சேர்ந்தார்.

அதன் பின்னர் வகுப்பில் ஒவ்வொரு முறையும் அவர் முதல் மாணவனாக சிறப்பிடம் பெற்றார்.

சர்வேதச கணிதப்போட்டிக்காக அவர் அவுஸ்திரேலிய நியூசவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் தங்கப்பதக்கம் வென்றார். மயூரனின் தந்தை வீரகத்தி சிவப்பிரகாசம், வீதி அபிவிருத்தி அதிகார சபையில் படவரைஞராக பணிபுரிகிறார்.

வடக்கில் யுத்தம் நிகழ்ந்த காலத்தில் தங்களுக்கு மின்சாரவசதி இருக்கவில்லை என்றும் தனது மகன் பெருமளவு நாட்கள் மண்ணெண்ணெய் விளக்கின் உதவியுடனேயே கல்வி கற்றதாகவும் மயூரனின் தந்தை சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்ரே தங்களுக்கு மின்சார வசதி கிடைத்ததாகத் தெரிவித்துள்ள சிவப்பிரகாசம் தாங்கள் பொருளாதார ரீதியாக மிகவும் வசதி படைத்தவர்கள் அல்ல என்று கூறினார்.

மயூரனின் சகோதரர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் மூன்றாம் ஆண்டு படிப்பை மேற்கொண்டு வருகிறார்.

மயூரனை மேற்படிப்பிற்கென வெளிநாடு அனுப்பவுள்ளதாகவும், அவர் அங்கு கல்விகற்று நாடு திரும்பி தாய்நாட்டிற்கு சேவையாற்ற வேண்டும் என்று விரும்புவதாகவும் சிவப்பிரகாசம் கூறினார்.

### எழுச்சிப்...

சகல பிரதேசங்களும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, புதுக்குடியிருப்பு பிரதேசம் என்றுமில்லாதவாறு எழுச்சி கொண்டுள்ளது. அனைத்து மக்கள் மத்தியிலும் எழுச்சி நாள் தொடர்பான உணர்வலைகள் மேலோங்கியுள்ளதைக் காண முடிகின்றது.

எழுச்சி நாள் இடம்பெறும் மாலதி விளையாட்டு மைதானம் அலங்கரிக்கப்பட்டு விசேட மேடை அமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் வருவதற்கு சகல போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது. இந்த எழுச்சி நாள் நிகழ்வுக்கு விசேடமாக தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தரவுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், சந்திரசேகரன் ஆகியோரும் வருகை தரவுள்ளனர். இவர்களுடன் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர் கலந்து கொள்வார்கள். அத்துடன் பல ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் வருகை தரவுள்ளனர். (18, 19)

# இணுவிலில் இளம்குடும்பஸ்தர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

யாழ்.இணுவிலில் தமிழ் வர்த்தகரான பாலசிங்கம் சிவநேசன் (வயது-38) இனந்தெரியாத குழுவினரால் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.உடுவிலில் இருந்து தனது வீட்டிற்கு மதிய உணவிற்காக சென்றுகொண்டிருந்தபோது இனந் தெரியாதகுழுவினரால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.பாலசிங்கம் சிவநேசனின் சடலம் மேற்கு இணுவிலில் உள்ள தோட்டப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இவரைக் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி சுட்டுக்கொன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிறிலங்காப் படையினர், சடலம் இருந்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர் இக்கொலைக்கான காரணம் தெரியவரவில்லை என்று சிறிலங்காப் பொலிசார் தெரிவித் துள்ளனர். சுட்டுக்கொல்லப்பட்ட நபர் மூன்று குழந்தைகளுக்கு தந்தையாவார். (41,33,27,37)

# நெல்லியடியில் அடிகாயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடிப் பகுதியிலுள்ள வாகனதிருத்தகம் ஒன்றில் இருந்து நேற்றுக்காலை இளைஞர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. கட்டித்தொங்கவிடப்பட்ட நிலையில் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட இந்தச் சடலம் கரவெட்டி இடைக்குறிச்சியைச் சேர்ந்த தவராசா-கிருஷாந்தன் (வயது-19) என்பவருடையது என இனம் காணப்பட்டுள்ளது.நெல்லியடி-கொடிகாமம் வீதியிலுள்ள அரசடிப்பகுதியில் மீட்கப்பட்ட இச் சடலம் மந்திகை வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைக் கப்பட்டுள்ளது.சடலமாக மீட்கப்பட்டவரது உடலின் பல இடங்களிலும் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் நெல்லியடிப் பொலிசார் கூறினர். (27,33)

### அவரச....

அதிகாரத்தைப் பயன்படுத்தி 14 நாட்களுக்கு அவசரகாலச் சட்டத்தை நீடித்திருக்க வேண்டும்.ஆனால் அவ்வாறான நடவடிக்கை எதனையும் எடுக்காது சனாதிபதி அமெரிக்கா பயணமாகியுள்ளமையால் அவசரகாலச் சட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளதாகவே கொள்ள வேண்டியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

**தமிழ்ச்செல்வன்....**சமாதான செயலகத்தில் காலை 10 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### வீரவணக்கம்...

த. (முகவரி 29, வேம்படி றோட் மூன்றாம் குறுக்குத்தெரு அடைக்கலமாதா கோயிலடி யாழ்ப்பாணம்) என்ற போராளியே சாவடைந்தார்.

10-09-2005 அன்று திருமலை மாவட்ட தோணிக்கல் எனும் இடத்தில் தவறுதலான வெடிவிபத்தொன்றின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ மேஜர் தமிழ்வேந்தன்

(சதாசிவம் புண்ணியராஜா, குமாரபுரம் கிளிவெட்டி, திருமலை, த.முகவரி, பாரதிபுரம் கிளிவெட்டி திருமலை) என்பவரே சாவடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### புலிகளின்...

மொழியிலான ஒலிபரப்பு வழமையான ஒலிபரப்போடு பகல் 11.00 மணியிலிருந்து 11.30 வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிபரப்புக்களில் ஒவ்வொரு மணித்தியாலயங்களுக்கும் செய்திகள் இடம்பெறும். 26-09-2005 புலிகளின்குரல் காலைச் செய்தி காலை 7.00 மணிக்கு நேரம் மாற்றப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பத்திரிகைப் பார்வை இடம்பெறும் 27-09-2005இலிருந்து வானொலி மன்ற நிகழ்ச்சிகள் யாவும் குறிப்பிட்ட நாட்களில் இரவு ஒலிபரப்பில் மாலை 06.05இற்கு நேரம் மாற்றப்பட்டுள்ளது

15-09-2005 வியாழக்கிழமை தொடக்கம் தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் நினைவு நாட்களையொட்டி முதல் நாளான 15.09-2005 காலை 10.30 மணி வரையும் 16-09-2005 தொடக்கம் 25-09-2005 வரை காலை 9.30 மணி வரையும் நிறைவு நாளான 26.09.2005 பகல் 11.30 மணி வரையும் சிறப்பு ஒலிபரப்பாக ஒலிபரப்பாகவுள்ளது.

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் நினைவு நாட்களில் முதல் நாளான வியாழக்கிழமை காலை 9.55 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றி மலர் வணக்கம் செலுத்துவதற்கு அமைவாகவும், தொடர்ந்துவரும் நாட்களில் காலை 9.00 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியேற்றி மலர்வணக்கம் செலுத்துவதற்கு அமைவாகவும் நிறைவு நாளான 26-09-2005 அன்று காலை 9.00 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியேற்றி மலர்வணக்கம் செலுத்துவதற்கு அமைவாகவும் தியாகி லெப். கேணல் திலீபன் ஈகச்சாவைத் தழுவிக்கொண்ட 10.48 மணிக்கு மணியொலியுடன், அகவணக்கம் செலுத்துவதற்கு அமைவாகவும் புலிகளின் குரல் அறிவிப்புக்களை வழங்கவுள்ளது.

**மகிந்த...**நிபந்தனைகளுடன் இறுதித் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளமைத்தல் உட்பட 12 நிபந்தனைகளுடன் எதிர்வரும் தேர்தலில் மகிந்தவை ஆதரவளிப்பது என்று ஜாதிகஹெலஉறுமய முடிவு செய்துள்ளது..

மேலும் பெருமளவு பௌத்த பிக்குகள் இதில் கலந்து கொண்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியிலேயே மகிந்த ராஜபக்ஷ, ஹெலஉறுமயவுடனான இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுப் பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் போது ஒற்றை ஆட்சியின் கீழ் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது ஒருநிலப்பகுதி எந்த ஒரு இனத்தின் பூர்வீக தாயகப் பகுதி என ஏற்றுக் கொள்ளக் கூடாது. மற்றும் மாவட்ட மாகாண எல்லைகளைத் திருத்தம் செய்தல், எந்த ஒரு இனத்திற்கும் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுக்கக் கூடாது, பயங்கரவாத செயல்களுக்கு இடமளிக்காது இருத்தல், போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்தல் மற்றும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமானால் உரிய காலப்பகுதிக்குள் அதனை மேற்கொள்ளவேண்டும். இதன்போது பிரிவினையைக் கைவிடுதல் ,ஆயுதங்களைக் களைதல், சுனாமி நிவாரணசபையை இரத்துச் செய்வது போன்ற விடயங்கள் பிரதமருக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.